9

சித்ரபாநுஹுல
வைகாசி - ஆனிமீ

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 6

59

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

OFFICE OF THE REGISTRAR OF B...
13 JUL 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

June, 1942
Vol. 1, No. 6

JL
2100104

ரூபா

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	பதயோஜநா ரஸங்கள்	188
2.	தேவாலய தர்மம்	195
3.	பாசுரங்களின் பகுதி	199
4.	திருமாமகளின் திருமணம்	205
5.	ஸ்ரீரங்க சட மதன யதீந்த்ரன் ஷட்கம்	219
6.	செய்திகள்	220
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	224

ஸ்ரீ.

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞ

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்பட்டிருக்கும் பக்ஷத்தில், உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன், வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 1	சித்திரபாநு வருஷ வைகாசி - ஆனி மீ	ஸஞ்சிகை 6

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
13 JUL 1942
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தஹர்ம்யேஷு நித்யம் நித்யம் ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாதேவ்யா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

2/0/04

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

பதயோஜநா ரஸங்கள்

[ஸ்ரீ. உப. அன்பில் ஏ. வி. கோபாலாசார்யர், திரிசிராப்பள்ளி]

ப்ராயேண சிந்தாமணி வாக்யங்களை அப்படியே வைத்துக் கொண்டு பதயோஜனையை மட்டும் அதன்படியே விளக்குவதாக ப்ரதிஜ்ஞை. முடிவிலும், 'விஷாணீம் ஸுந்தராவஹ்' என்று சிந்தாமணியை அநுபவிக்கச் செய்வதே இதன் நோக்கென்று கூறப்பட்டது. ஆயினும் பல ரஸப்பொருள்கள் வ்யங்க்யமாயும் வாச்யமாயும் இருப்பதைச் சுருங்கப் பரிகணநம் செய்வோம். "சிந்தாமணியையும் பதயோஜனையையும் 'அந்யோந்ய ஹஸ்தப்ரதமாக பரஸ்பரோபகாரகமாகச் சேர்த்து ஆசார்யவான்கள் அநுபவித்து தரிக்க ப்ராப்தம்" என்று ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மஹா தேசிகனுடைய பூமிகையழகாக வுரைத்தது.

முதல் ஸ்லோகம். (1) ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன் கடாக்ஷம் பெற்ற வேதாந்த ப்ரதிஷ்டாபநாசார்யர், ஸ்ரீ ரங்கநாத சாஸநத்தை முன்னிட்டு அவரருளிய வேதாந்தாசார்ய பிருதத்தை ஸத்யமாக்க அவதரித்த ஸாராவளியின் உரையிலீடுபடுவது உசிதம். (2) கவிதார்க்கிக ஸிம்ஹத்தின் ஸாராவளியை அஹோபிலச் சிங்கப்பிரான் கடாக்ஷ பாத்ரரும் பாதுகையுமான ஆசிரியர் ப்ரகாசப்படுத்துவது உசிதம். பாமதீ வ்யாக்யாநமான கல்பதரு அத்யத்புதமான ந்ருஸிம்ஹ மங்கள ஸ்லோகத்துடன் தொடங்கிற்று. கல்பதரு க்ருத்தான அமலாநந்தர் சிறந்த ந்ருஸிம்ஹ பக்தர். கல்பதரு வென்று பதயோஜனைக்குத் திருநாமம் சாற்றினது உசிதம். நிகம கல்பதருவிலிருந்து பரிமளம் வீசுவது போலும் ரஸகநமான பழங்கள் கிடைப்பது போலும் ஸாராவளி சிந்தாமணி இவற்றின் ஸௌகந்தங்களையும் ரஸ பலங்களையும் நம்மை அநுபவிக்கச்செய்யும் கல்பதரு. (3) 'தத்வஜ்ஞாவாஜிவக்த்ர:' வாஜி வக்த்ரர் உரைத்த ஸாராவளிக்கு ஸிம்ஹ வக்த்ரர் தம் ஆஸ்தாந துரந்தரரைக்கொண்டு உரை உரைக்கச் செய்வது உசிதம். (4) 'ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்' என்று ந்ருஸிம்ஹாவதார நிமித்தம் ப்ரஸித்தம். ஸாராவளி அவதரித்த நிமித்தம், 'நிஜஸத்ருஷ்பாஷிதம் ஸத்யம் விதாதும்'. 'ரஜூஸத்பூ' 'வேதாந்தாசார்யர்' என்ற பிருதசாஸநப்பட்டய மளித்ததற்குக் காரணம் யாதெனில், 'ப்ரதிஷ்டாபித வேதாந்த:, ப்ரதிக்ஷிப்த பாஹ்ய:, வேதாந்தாசார்ய:, ஸ்ரீமாந்' என்று பெருமாள் ப்ருத்யரான வரதகுருவும் அப்புள்ளாரும் செய்த அநுக்ரஹ வசநத்தை ஸத்யாபநம் செய்யவே. பாஷிதத்தை ஸத்யமாகச் செய்வதென்பது பாஷ்யத்தை ஸத்யமாகவும் அப்ரகம்ப்யமாகவும் பொய் கலவாததாகவும் ஸ்தாபனம் செய்யும் விஷயத்தில்தான் மிக ரஸமாகப் பொருந்தும். நிஜப்ருத்யராகிய சேஷரால் பாஷிதமான பாஷ்யத்தை 'ஸதைத்ரகாஸம்வி' என்று அங்

எவர்த்தமாக ஸத்யமாக்க ஸாராவளியை பாஞ்சஜந்யமுகத்தால் பாடுவித்தார். (5) 'ஶாஸநம் கிமபி' 'கிமபி' என்பதற்கு இன்னதென்று சொல்வதற்குச் சொல்லிலடங்காத ஆஸ்சர்யமான அநிர்வாச்யமான ஓர் ஸ்வப்நாதி முகமான நியமன மென்று கருத்து. ஸ்வப்நத்தை மாயா மாத்ரம், அநிர்வசநீயம், பொய் யென்பர். மாயா மாத்ரமென்பது உண்மை; அநிர்வசநீயம் என்பதும் உண்மை. ஆனல் மாயா மாத்ரம் என்பது முழுவதும் ஆச்சர்யமயம்; ஆச்சர்யமல்லாததொன்றுமே இல்லையென்பதைச் சொல்லுகிறதென்றும் 'அஜ்ஞேயத்வாதவாச்யம் தத்' என்றபடி வாசாமகோசரமான அத்யத்புதமானதால் 'அநிர்வாச்யம் கிமபி' என்று சொல்லுகிறதென்றும் காட்டி ஸ்வப்நத்திலும் ஆச்சர்யமான ஸத்யங்களுண்டென்று ஸ்தாபித்த ஸத்யைகாலம்பி பாஷ்யத்தை அப்ரகம்ப்யமாக ஸத்யம் செய்ய அவதரித்தது ஸாராவளி. "மீமாம்ஸையில் மூன்று காண்டங்களிலும் எங்கும் ம்ருஷா வாதலேசத்திற்கும் அவகாசமில்லையென்று முடிவில் 553 இல் விளக்கப்பட்டது. மாயா சப்தம் பொய்யென்னும் பொருளை சக்தியால் சொல்வதல்ல. ஔபசாரிகமாய்ப் பேசலாம். அதனுலென்ன. 'தேவமாயைவ நிர்மிதா', 'தாம் தேவமாயாமிவ திவ்யரூபிணீம்' 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா', 'மாயாமேதாம் தரந்தி', 'தேந மாயா ஸஹஸ்ரம் தத்', 'இந்த்ரோ மாயாபி: புருரூப ஈயதே' முதலிய பல விடங்களில் ஆச்சர்யமான ஸத்ய விஷயங்களில் ப்ரயோகிக்கப்படுவதால் ஆச்சர்யத் தன்மையுடைய தென்பது மாயை யென்னும் பதத்திற்கு முக்யப்பொருள் என்று ஸ்வப்ந விஷயமான ஸந்த்யாதிகரணத்தில் ஸாராவளியின் கடைசி ஶ்லோகம். ஸந்த்யத்திலவதரித்த அத்யத்புதப் பெருமாள் ஸந்த்யத்தின் ஸத்யத்வத்தை விளங்கச் செய்கிருர். எல்லோர்க்குமாசிரியரான ஆதிவண்சடகோப ஸ்வாமிக்கு ஶ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹனுடைய ஸ்வப்நநியமநங்கள் ஸத்யமானதும் பல திவ்ய தேசங்களில் அர்ச்சக முகமாக நியமநங்களைப் பூர்த்திசெய்த வ்ருத்தாந்தங்கள் பூமிகையில் கூறப்பட்டன. (6) 'பொய்யும் மெய்யும் மிஸ்ரமாய் மிதுநமாய்க் கலந்துள்ளது லோகவ்யஹாரம்' என்று பிறர் பாஷ்யத்தில் முதலில் பேசிவிட்டு அத்யாத்ம பரமார்த்த சாஸ்த்ர வ்யவஹாரமான ஸூத்ரசாஸ்த்ரத்திலும் நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது பாகம் பொய்யையே அவலம்பித்தது; உபய விபூதியும் பொய்; வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநம் பொய்; ஸாதநங்களான ப்ரஹ்மவித்யைகள் பொய்; ப்ரஹ்மகுணங்கள் பொய்; உத்க்ராந்தி பொய்; அர்ச்சிராதிகதி பொய்; ப்ரஹ்மப்ராப்தியும் பொய் என்கிருர்கள். நம் பாஷ்யம் ஸத்யத்தையே அவலம்பித்தது. (7) 'ஸ்வஸ்தி சாஸநம்' என்று சேர்த்தும் அந்வயம் காட்டப்பட்டது. க்ஷேமங்கரமான ஆசீஸ்ஸின் ஆசாஸநத்தோடு கூடிய பதம். ஸ்வஸ்தியோடு தொடங்காத சாஸநப்பட்டயமில்லை. க்ஷேமங்கரமென்பதைச் சொல்லும் 'ஸ்வஸ்தி' சப்தத்தோடு

தொடங்கி 'ஶ்ரௌணதார்க்ஷ்யஃ' என்று க்ஷேமகாரியோடு ஸமாப்தி. ஸாராவளி பாடி முடிகையில் கருட வாஹந ஸேவை; வேத வாஹந ஸேவை. 'அப்புள்ளார்' என்றும் முடிவு. ஆத்யந்தங்களால், 'ஹஸ்தி நகஸ்தார்க்ஷ்யஃ' என்றும் ஶ்ரௌதமங்களத்தின் ஸித்தி. எத்தனை மங்களங்களின் சேர்த்தி! ஸ்வஸ்தி, ஸ்ரீ ரங்கம் என்று மங்கள சப்தங்கள். (8) நிருபபதமான (வெறும்) ஸூத்ரம் என்னும் பதம் ப்ரஹ்ம ஸூத்ரத்தையே குறிக்குமென்பர். 'நிர்விஶேஷித ஸூத்ரத்வம் ப்ரஹ்மஸூத்ரஸ்ய வாச்யதஃ' என்ற ஸ்காந்த வசநம் ஸ்ரீமத்வ பாஷ்யத்தில் உதாஹரிக்கப்பட்டது. அதுபோல் நிருபபதமான 'பாஷ்யம்' என்னும் பதமும் யதிபதி கதிதமான ஸ்ரீ பாஷ்யத்தையே முக்கியமாகக் குறிக்கும். ஆர்ஷமான ப்ராசீந வ்ருத்தியை அநுஸரித்து ஸூத்ராக்ஷரங்களின் நிஜப் பொருள்களைக் கொண்டுவந்து தந்தது பாஷ்யம். இங்கு முதல் ஶ்லோகத்தில் நிருபபதமான பாஷ்யபதம் ஸ்ரீ பாஷ்யத்தையே குறிக்கும், கீதையென்பது பகவத் கீதையை முக்கியமாகக் குறிப்பதுபோல. (9) வேங்கடேசரின் கண்டையின் அவதாரமான ஸ்வாமியை அரங்கன் பாஞ்சஜந்யமாக உபயோகித்து ஸாராவளியை முழக்கி இன்புற்றான். கண்டை தாள வாத்யம்; வேங்கடேசனே வீணை விசேஷமாக ஸ்வகண்டையை ஓர் ஸமயத்தில் உபயோகித்தான். கண்டை விபுத வைரிஸேனைகளின் தைர்யத்தை யழிக்கும். பாஞ்சஜந்யம் விரோதிகளின் ஹ்ருதயங்களைப் பிளக்கும். இரண்டு வாத்யக் கருவிகளின் கார்யம் ஒன்றே. பாஞ்சஜந்யம் ப்ரணவ மஹிமை யுடையது. சங்கம் ஆகாரத்தில் ஓங்கார வடிவுள்ளது; த்வநியிலும் 'தாரம்.' ப்ரஹ்ம ஸூத்ரத்தை ஓங்காரத்தோடு தொடங்கவேணும். 'ஓம்பூர்வாணி ஸூத்ராணி பவந்தி' என்று ஆபஸ்தம்பர் பரிபாஷா ஸூத்ரம். ஸூத்ரங்களை வேதத்தைப் போல் பார்க்கவேணும். 'ஸ்ரவத்யநோங்க்ருதம் ப்ரஹ்ம பரஸ்தாச்ச விஶீர்யதே'. வேதம் சொல்லுகையில் 'ஓம்' என்று தொடங்கி 'ஓம்' என்று முடிக்கவேணும். இல்லாவிடில் அநர்த்தமே. 'ஓம்' என்பது வாத்தியப் பெட்டிபோல் என்பர். நமக்கு ஸந்நிக்ருஷ்டரான மாத்வர்கள் ப்ரதி ஸூத்ரமும் தொடக்கத்திலும் முடிவிலும் ஓங்காரத்தை உச்சரிப்பர். ப்ரஹ்ம ஸூத்ராதிகரண ஸாராவளியின் ப்ரதி ஶ்லோகமும் ஓங்காரமயமான பாஞ்சஜந்யத்தாலேயே ப்ரணவ விமாநத்துக்குள்ளிருந்து ப்ரணவ வாச்யரான அரங்கனாலேயே கோஷிக்கப்படுகிறது. மத்யே ரங்கத்திலிருந்து, 'மம ஹ்ருதயே வர்த்ததே' என்றபடி ஸ்வாமி ஹ்ருதய குகையிலிருந்து பாடுகிறாராகவுமாம். கீதை பாடுவதன் முன்னர் பாஞ்சஜந்ய கோஷம் செய்யப்பட்டது. அது கீதைக்கு ஓர் ஓங்கார மங்கள கோஷத் தொடக்கம். கீதையும் ஓர் உபநிஷத் தென்பர். 'ஶாஸநம் கிமபி'—இந்த ஸாராவளி பாடும் சாஸநம் பெருமாள் பாஞ்சஜந்யமாக ஊழியம் செய்யும் ஓர் அத்புதமான சாஸநம். வேங்கடேசனுக்குக் கண்டை ஊழியம்; அரங்கனுக்குப் பாஞ்சஜந்யம் ஊழியம். (10) 'ஸூத்ரகாரமபி பாஷ்யக்ருத்' என்று ஸூத்ர பாஷ்யகாரர் முழு

ஸத்யவாதி என்றதால் ஸத்யத்தையே ஸூத்ரங்கள் முழுமையும் உரைக்கின்றன. ஸூத்ரகாரரும் ஸூத்ரமும் முழு ஸத்யவாதி, ம்ருஷாவாத லேசமில்லை யென்று ஸூசிக்கப்பட்டது. இதை முடிவு ஸ்லோகத்தில், 'கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே' என்பதால் ஸூத்ரகாரரை ஸத்யமான வேதங்களின் ஆசார்யர், ஸத்யமான வேதாசார்யப் பட்டம் பெற்றவரென்று ஸ்பஷ்டம் செய்துளது. அந்த ஸ்லோகத்தில், தமக்கு வேதாந்தாசார்யர் என்ற பட்டம் எப்படி ஸத்யமோ அப்படியே பராசர புத்ரரான வேதாசார்யரென்கிற பெயர் ஸத்யமே, பொய்யல்ல என்று பதயோஜனை பொருள் உரைத்தது. அதன் கருத்து யாதெனில்; இந்த ஸாராவளியில் எப்படி ஸ்வாமியின் வேதாந்தாசார்யத் திருநாமம் ஸத்யமாக்கப் பட்டதோ அப்படியே வ்யாஸரின் வேதாசார்யத் திருநாமமும் பொய்கலவாத மெய்யென்று ஸ்தாபிக்கப்பட்டது. பிறர், வேதங்களும் மாயிகம், பொய்யென்றார்கள்; ஸூத்ரகாரரான வ்யாஸரும் பொய்; வேத வாதியும் பொய் வேதாசார்யருமானார்! ஸத்யை காலம்பியான யதிராஜன் பாஷ்யம் வேதங்களை ஸத்யமாக நிரூபித்தது, வேதாசார்ய நாமத்தையும் மெய்யாக்கிற்று. வேதம் நித்யமென்றிசைந்தும் அது ஸத்யமல்ல வென்றார்கள் பிறர்! 'ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம்' என்று ஸூரிகள் திருவோலக்க மத்யத்தில் கையைத் தூக்கிக் கொண்டு சபதம் செய்து 'வேதத்திலும் மேலான சாஸ்த்ரமில்லை' யென்று உத்கோஷித்த வேதாசார்யரை ஸத்ய வேதாசார்யராக்கினது ஸத்யை காலம்பி பாஷ்யம். 'ஸத்யேந' என்றதால் வ்யாஸ சபதமும் ஸ்மாரிதம். (11) ஆத்யந்தங்களிலும் நடுவிலும் ஸ்ரீமத் வ்யாஸார்யரையும் தம்மால் ரக்ஷிக்கப்பட வேண்டியதாக ந்யாஸம் செய்யப்பட்ட ஸ்ருதப்ரகாசிகையையும் வாசநிகமாகவும் வ்யங்க்யமாகவும் பல்கால் குறிக்கிறார். ஸாராவளி ஸ்ருதப்ரகாசிகையின் ஓர் ரக்ஷையாகும். அது வ்யாஸம்; இது ஸமாஸம். வ்யாஸத்தால் விஸ்தரிக்கப்பட்டதை ஸமாஸத்தால் ஸ்புடமாய்த் தெளியவைக்கிறார். வ்யாஸத்திற்கு ஸமாஸத்தால் ரக்ஷை. 'ஸமேஷுவாதிநா ஸமாஸவாதியோ வ்யாஸ உத்தமம் ஜிதகாஷ்பூர்வகம் ஹ்ருதி ஸாஷ்பூர்வகம் ஹாவயே' என்ற தத்வமார்த்தாண்ட மங்கள ஸ்லோகத்தை நினைக்கவேணும். முதல் ஸ்லோகத்தில், 'தத்வாஷ்யம் ஸவ ஹாஷ்யக்ருத ஸவ ஹ்ருதி: ஸம்யக் ப்ரஸீதந்து ந:' என்று ஸ்ருதப்ரகாசிகையை அநுஸரித்திருப்பதை ஸாராவளி அநுபவத்தில் விவரித்துள்ளோம். 'ஹாஷ்யம் வெக வ்யவ்யணோக ஸ்யம் யதிவதி:' என்பதையும் 'யக்ஷஷ்ணிஷ்ப்ரஷ்டயேடும் யதிவதிஹ்ருதயாரூடிஷு' என்று கடைசி ஸ்லோகத்தில் ஸூசிக்கிறார். 'யதிபதி ஹ்ருதயத்திலுள்ளதை ஈச்வரனை யல்லவோ கேட்கவேண்டும். அவரை ப்ரத்யக்ஷமாகக் காணப் பெற்றிலோம்' என்றதற்கு 'அவரே எம்மாசிரியருடன் சேர்ந்து இந்த க்ரந்தத்தை ப்ரவசநம் செய்து யதிபதி ஹ்ருதயாரூடத்தை விளக்கினாரென்கிறார். 'கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே' என்பதனால் 'வ்யாஸார்யர்' என்று திருநாமம் சாற்றப்பட்ட ஸ்ரீ ஸுதர்சந ஸூரி

யும் ஸூசிக்கப்படுகிறார். பராசரபட்டர் திருவம்ஸ்யருக்கு பாராசார்யர் நாமமும் கூடலாம். அம்மாளிடமிருந்து தாம் ஸ்ருதத்தை ப்ரகாசப்படுத்தியதாக வ்யாஸார்யரின் மொழி. 'எங்கள் ஸ்ருத ஸமுத்ரத்திலிருந்து பொங்கி வழிந்த அமுதம் இந்த ஸாராவளி' என்று ஸ்வாமி மொழி. வ்யாஸார்யருடைய 36,000 வ்யாஸத்திற்கும் இந்தப் பஞ்ச சத ஸ்ரக்தரா ஸமாஸத்திற்கும் ஒரே ஸ்ருத ஸமுத்ரம் மூலமாகும். வரதாசார்ய ஸ்ருதமான ஸம்ப்ரதாயார்த்தங்களையே இரண்டும் க்ரந்த ரூபமாக ஶாஸ்வதமாக்கின.

(12) பஹுவித்துக்களான பெரியோர்கள் அவஹிதர்களாய்க் கேட்டுக் கொண்டிருக்கையில் இந்த ஸாரர்வளி கொஞ்சம் கொஞ்சமாய்ப் பாடியிருக்க வேணும்; முழுவதும் ஸபையில் பாடியதே. தொண்டர்க் கமுதுண்ணச் சொன்ன சொற்மாலை' 'ஸாவஹிதஸஹ்ருதயம்' பெரியோர்கள் அவஹிதர்களாய்க் கேட்டுக் கொண்டிருக்கையில் அவர்கள் ஸந்நிதியில். 'ஸஹ்ருதய நிபுணை: ப்ராப்யமப்யுக்ஷணீய:'. இந்த கம்பீர சாஸ்த்ரத்தில் சிக்கலெடுக்கும் வழிகளைக் கோடி காட்டிக்கொண்டிருக்குமென்னை நிபுணர்கள் அநுகூலமாக ஈக்ஷணம் செய்து கொண்டிருக்கவேணும். 'ஹ்ருத்யா பத்யாவலீயம்….ஸாவதாநாஸ்ஸந்தோஷா' இந்த ஹ்ருத்யமான பாமாலை ஸாவதாநரான உங்களை ஸந்தோஷப் படுத்தவேணும்.' என்று முதலில் கூறிவிட்டு, முடிவில் 557 இல் 'ஸந்த:' என்று ஸப்யரை ஸம்போதித்து, 'ஸந்தோஷம் ஸந்வீத' 'உங்களுக்கு ஸந்தோஷத்தைப் பெருக்கவேணும்' என்றார். 558 இல் 'க்ருதிஷு நாவிது: க்ஷேமயந்த்ய: கிரந்த்ய:' என்றார். 'க்ருநாவிது:' என்பதற்கு 'க்ருநாக்ஷேம்யந்நவிது:' என்று பதயோஜனை காட்டிய பொருள். 'ப்ராப்ய' அநுகூலமாய் அத்யக்ஷணம் செய்யவேண்டும் என்ற தொடக்கக் கோரிக்கைக்கிணங்கி 'க்ருநாக்ஷேம்யந-ப்ராப்யம்-விது:' என்று உரை. 'ஸம்ப்ரேக்ஷ்ய ஹே வரிஷ்ட' என்று கூப்பிட்டுக் கோரியதற்கு 'தயாஸ்ஸ' ஸம்பந்தம் என்று ஸப்யர்களுடைய உத்தரம். 'க்ருபணர்' க்ஷேபம் செய்வர் என்று பதயோஜனை; 'நிபுணை:' என்பதற்கு எதிர்த்தட்டாக க்ருபண சப்தத்தை உபயோகித்தது.

(13) ஸாராவளி முழுவதும் ஸ்ரக்தரா வ்ருத்தம். தத்வமுக்தா கலாபமும் அப்படியே; தாத்பரியரத்நாவளியும் அப்படியே. ஹாரங்களுக்கேற்ற வ்ருத்தம். ஸ்ரக் என்பது மாலை. மாலையை வைத்துக் கொண்டிருக்கும் பெண்கள் ஸ்ரக்தரைகள். ஏழு கணங்களடங்கிய 21 அக்ஷரங்கள். முதலில் ஸர்வ குருவான மகணம். ஒவ்வொரு அடியும் ஸர்வ குருத் தொடக்கம். ஸர்வர்க்கும் ஆசார்யகம் செய்யும் ஒவ்வோரடியும். 'த்ரிமுநியதியுதா' என்று ஸ்ரக்தராலக்ஷண ஸ்லோகத்திலுளது. முநிகளான மூன்று யதிகளோடு கூடியது. மூன்று யதிகள் மூன்று விஸ்ரமஸ்தாநங்கள். தீர்த்தகரர்களான மூன்று யதிகளோடு கூடியது வேதாந்தம். 'விஷ்ணோ: ஸ்ரோதோ த்ருஷ்டி வ நிமஜ்ஜிதா யாமுநாசார்யவர்ய:' என்று 546-ல் கடைசி அதிகரணத்தில் யாமு

நரைக் கீர்த்தநம் செய்துளது. 'தத்வாநாம் ஸ்வயாநாநந்தமநுபவதி தயோ: பூர்ணே கோ விசேஷ:' என்று யாமுநர் அகாத ப்ரஹ்மாநந்த ஸமுத்ரத்தில் முழுகும் சதுர்முகாத்யாழ்வார்களைப் பேசியதுபோல இங்கே பேசுகிறார். ப்ரஹ்மஸூத்ரமும் ப்ரஹ்மாநந்த ஸாகரம். வ்யாஸர் அதில் முழுகி நம்மையும் முழுகச் செய்யும் ஓர் அத்புதமான ஆழ்வார். 'த்ருஷ்ணாம் க்ருஷ்ணாஶ்ரிதாநாம் வர்ணயதி வராம் யாவதா தாவதேதத்' என்று குணோபஸம்ஹார பாதத் துடக்கத்தில் க்ருஷ்ணாம்ருத ஸாகரத்தில் அதி தீவ்ரமான த்ருஷ்ணையை விபுலமாய் உண்டு பண்ணுவதற்கு வேண்டியதை யெல்லாம் உபயலிங்க பாதத்தில் ஸூத்ரகாரர் உரைத்தாரென்றார். 'வராம் த்ருஷ்ணாம்' என்ற ஸாராவளீ பதங்களுக்கு 'பக்தி நிஃஶ்ரேணி பர்வமும், ஆசைப்பட்ட விஷயம் கிடையாவிடில் மடலூரும் ப்ரவ்ருத்தியைச் செய்விக்கும் வாஞ்சையைத் தருவதுமான அத்யுத்கடத்ருஷ்ணை' என்று பதயோஜநை பொருளுரைத்தது. ,யதிபதி' யென்று முனியோடு தொடங்கி 'யதிபதி ஹ்ருதயாரூட:' என்று ஸாராவளி முடிந்தது. 'நாதே ந: ஸாக்ஷிமத்யே' என்று முடிவில் ஸ்ரீ நாதமுநி திருநாமத்தையும் ஒருவாறு குறித்துளது. இந்த மூன்று முநிகளான தீர்த்தகரர்களுடைய தர்சநம் 'யதிபதி யாமுநப்ரஹ்வ ஹ்ருதய: ப்ரஹ்வயந்தி ப்ரியே ஜநதி ஹிதம் ந ந: ஸ்வாமி ஸநாதயிஷ்ட' என்று தயாசதகத்தில்இம்மூன்று யதிகளின்வழியாக சரணாகதி சாஸ்த்ரம் வந்தது கூறப்பட்டது. 'நாதேநாரங்கம் ப்ரப்ரங்கம் ஸமாஹிதாவதிதம் யாமுநேயப்ரபவஸமுஸ்ரிதம் ஸம்யகுத்தீர்ணராமாநுஜமதி தத: ஶோதநம் ஶோதநம் ந:' என்று தத்வமுக்தாகலாபத்தில் இம்மூன்று முநியதிகளையும்கூறி ஸ்ரக்தராவ்ருத்தத்தைக் கைப்பற்றியதற்கு ஓர்காரணத்தை வ்யஞ்ஜநம் செய்தார். ஸாராவளி சாரீரகமானதால் இங்கே ஸ்ரக்தரைக்கு மற்றோர் ரஸக் கருத்தை 560-ல் காட்டுகிறார். 'தம் பஞ்சஶதாந்யப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி' என்ற ஶ்ருதியை அங்கே பதயோஜனை உதாஹரித்தது. 'ஐந்நூறு அப்ஸரஸ்கள் மாலாஹஸ்தைகளாய் எதிர் கொண்டோடி வந்து, அழைத்துச் செல்லுவர். ஸாராவளியில் 562 ஸ்ரக் தரைகள் உள்ளன. சில்லரையைக் கணக்கில் சேர்ப்பதில்லை. இந்த பஞ்ச சத ஸ்ரக் தரைகள் ஹ்ருதயத்திலிருந்தால் அவர்கள் திவ்யாப்ஸரஸ்கள் போல் ஹ்ருதய ஸ்தாநத்திலிருந்தே பரமபதத்திற்கு ஆதிவாஹிகைகளாக அழைத்துச் செல்வர். பெருமாளே பாஞ்சஜந்ய முழக்கத்துடன் இந்த ஸ்ரக்தரைகளுடன் அதிவஹநம் செய்விப்பார். ஹ்ருதயத்தின் அக்ரத்தில் ஓர் வெளிச்சமுண்டாகி அங்கிருந்து முக்தாத்மா ஹார்த்தாநுக்ரஹத்தால் பரமபதம் சேர்ப்பிக்கப்படுவான். இந்த ஸாராவளி ஸ்ரக்தரைகளை ஹ்ருதயத்தில் தரித்துக் கொண்டிருந்தால் பின்னால் இப்படி ஓர் அத்புதமான அதிவஹநம் நடக்கும்போலும். ஸ்ரக்தரைகளான மதிமுக மடந்தையர் அழைத்துச் செல்லும் அர்ச்சிராதிகதி தப்பாமற் கிடைக்கும். இந்த அப்ஸரஸ்கள் ப்ரஹ்மாலங்காரங்கள்

போன்ற ஸூத்ரதாத்பர்ய சில்பங்களால் அந்த ஆத்மாவை அலங்காரம் செய்து அழைத்துச் செல்வர்.

(14) 'ப்ரஹ்ம ஸூத்ரங்கள் வேதாந்த வாக்ய குஸுமங்களை புஷ்பமாலையாகத் தொடுக்கின்றன' என்பது ஸ்ரீ சங்கர பாஷ்யம். ப்ரஹ்ம ஸூத்ரங்களென்றும் புஷ்ப ஸ்ரக்குக்களைத் தரிப்பவை ஸாராவளி ஸ்ரக்தரைகள்; ஸூத்ரங்களின் தாத்பர்யங்களை அழகாக அலங்கரித்து ஹ்ருதயத்தை ரஞ்ஜநம் செய்வன.

(15) 'ஶாரீரகாயெ' என்பதற்குப் பதயோஜனை ரஸபரம்பரையில் முழுகச் செய்யும் ஓர் பொருளை யுரைத்தது. 'க்ஷீரராஶி' என்ற த்ருஷ்டாந்தத்தில் 'சாரீரமான ஸுகத்தைத் தருவது க்ஷீரராசி' என்று பொருளுரை. 'கம்' என்பது ஸுகத்தைச் சொல்லும். சரீர ஸுகத்தைத் தருவது பால். பித்தத்தை ஶமநம் செய்வது; இந்தப் பதப்பிரிவை - தார்ஷ்டாந்திகத்திலும் நாம் கொள்ள வேணும். அதில் அரும்பெரும் ஸுகமுளது. சாரீரனை ஸுகமாக (கம் ஆக) ஆநந்தமாக ஆநந்தஹேதுவாக விளக்குவது சாரீரக சாஸ்த்ரம். சாரீரனென்பது சரீரத்திலிருப்பவனைச் சொல்லும். அஸங்கோசந்யாயத்தால் ஸர்வ சரீரங்களிலும் உயிராகவுள்ள பரப்ரஹ்மத்தை முக்யமாகச் சொல்லும். ஒரோர் சரீரத்தில் மட்டுமுள்ள ஜீவனையும் சாரீரன் என்று சொல்வதுண்டு. இரண்டு சாரீரர்களையும் அவிபாகமாகச் சேர்த்து வைத்து ஸமந்வயம் செய்து அக்கலவியால் இருதலைக்கும் நிகழும் எல்லையில் ஸுகத்தை விளக்குவதே சாரீரகத்தின் ப்ரயோஜநம். பரமாத்மாவை அதாவது சாரீரனை உயர்வற உயர் நலமாகவும் எல்லையிலந்நலமுடையவனாகவும் எல்லையிலந்நலத்தை நமக்கு அருளுமவனாயும் காட்டுவதே சாரீரக சாஸ்த்ரத்தின் ப்ரயோஜநம். சாரீர ஸுகத்தை அதாவது ஆத்ம இன்பத்தைக் காட்டுவது சாரீரகம். சரீர இன்பத்தைக் காட்டும் மற்றைய நூல்களைப் போன்றதல்ல. ஆநந்தமயாதிகரணத்தில், 'ஜகச்சரீரனான பரமாத்மாதான் நிருபாதிகமான சாரீரனான ஆத்மா. அதை யிட்டுத்தான் பரப்ரஹ்மத்தைப் பற்றிய இந்த சாஸ்த்ரம் சாரீரகமென்ற பெரியோரால் பணிக்கப்படுகிறது' என்று ஸ்ரீ பாஷ்யம். 'கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம' என்று உபகோஸல வித்யையில் சாந்தோக்யம் பாடினதை 'ஸுகவிஶிஷ்டாபிதாநாதேவ ச' என்று ஸூத்ரகாரர் ஆநந்த பரவசராய் பரப்ரஹ்மம் ஆநந்தகுண விசிஷ்டமென்பதைத் தெளிவாய் ஸித்தாந்தப் படுத்தினர். 'கம்' என்பது ஸுகம், 'கம்' என்பது ஆகாசம். ப்ரஹ்மம் எங்கும் பரந்த அளவற்ற ஸுகம். 'இந்த ஆகாசமான ஆநந்தமில்லையெனில் யார்தான் மூச்சுவிட முடியும்? உயிர்க்க முடியும்?' என்று ஆநந்தவல்லி. இவ்விரண்டினாலும் எங்கும் பரந்த அளவற்ற ஸுகமும் அளவற்ற ஆநந்தத்தோடுகூடியதும் அவ்வாநந்தம் முழுவதும் முக்தர்க்களிப்பதும் ப்ரஹ்மமென்று ஸித்திக்கிறது. ஆநந்தகுண விசிஷ்டம் ப்ரஹ்மம். (தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

தேவாலய தர்மம்

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வாந்
ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.]

[ஸஞ்சிகை 5 : பக்கம் - 166 தொடர்ச்சி]

மநுஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்க ளெல்லாம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன வென்று 'யஃ கஶ்சித் கஸ்யசித் தர்மோ மநுநா பரிகீர்த்தித: | ஸ ஸர்வோऽபிஹிதோ வேதே ஸர்வஜ்ஞாநமயோ ஹி ஸ: ||' என்கிற வசநம் சொல்லுகிறது. யத்வை கிஞ்ச என்று வேதம் சொல்லுகிறது. 'ஶ்ரூயதே மநுநா கீதௌ ஶ்லோகௌ' என்பது ராம வாக்யம். அத். 9-ல் 'தேவதாநாமபி தேவதா தாரதேசகாநு | ஹஸ்த்யஶ்வரதஹர்த்ருஞ்ச ஹந்யாதேவாவிசாரயந் ||' [அத். 8, 285.] 'தைவதாந் ப்ராஹ்மணாந் ராஜ்ஞஶ்ச தேவதாநி ப்ரதக்ஷிணாநி ச குர்வீத' [அத். 4, 154.] 'தேவதாப்ரதிமாம் பங்க்த்வா ப்ராஸாதாம்ஶ்ச விதோஜயேத் |' [அத். 11, 424.] தேவஸ்வம் ப்ராஹ்மணஸ்வம் வா லோபேநோபஹிநஸ்தி ய: | ஸ பாபாத்மா பரே லோகே க்ருத்ரோச்சிஷ்டேந ஜீவதி || அத். 9, 234. ஸங்க்ரமத்வஜயஷ்டீநாம் ப்ரதிமாநாம் ச பேதக:| ப்ரதிகுர்யாச்ச தத் ஸர்வம் பஞ்ச தத்யாச்சதாநி ச ||'' இந்த வாக்யங் களினால் தேவாலய முண்டென்றும் ப்ரதிமை உண்டென்றும் வ்யக்த மாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளில், நம்பிக்கை யில்லை என்று ஒருவன் சொன்னால் அவன் சொல்லுகிற 'நம்பிக்கை இல்லை' என்கிற வார்த்தையிலும் யாருக்கும் நம்பிக்கை உண்டாகாது.

ஜ்ஞாந சக்தி முதலிய குணங்களை யுடைய ஸர்வேஶ்வரனிருக்க, அவனைவிட்டு ஜ்ஞாநாதி குணங்களில்லாத விக்ரஹத்தைப் பூஜிப்பது சரி யல்ல என்பதற்கு ஸமாதாநம்.

ஜ்ஞாந சக்த்யாதி குணங்களையுடைய ஈஶ்வரன் எங்கு மிருந்தாலும் 'ந தத்ர சக்ஷுர்கச்சதி' என்றும், 'கட்கிலீ' என்றும் சொல்லுகிற படியே, அந்த ஈஶ்வர ஸ்வரூபத்தை நமது கண்களால் பார்க்க முடியாத தினால் கண்ணால் பார்க்க முடியாத வஸ்துவை, 'புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடேந்தி வணங்க' முடியாததினால் அவ்வீஶ்வரனையே விக்ரஹத்தின் மூலமாக ஆராதித்துப் பலன்களை அபேக்ஷிக்கிறோம்.

உருவமில்லாத வஸ்துவை நெஞ்சால் கூட நினைக்க முடியாதென்று ‘ந தத்ருஷ்டிமயாஜ்ஞா ஶக்யம் த்ரஷ்டும் விஜயிதவ்யம் யத:’ என்று பராசரர் சொல்லியிருக்கிறார். இதனால் ஜ்ஞாநசக்தியில்லாத ப்ரதிமையை ஏன் பூஜிக்கவேண்டுமென்கிற கேள்விக்கு ப்ரதிமை மூலமாக ஜ்ஞாநசக்தியுள்ள ஈஶ்வரனைத்தான் பூஜிக்கிறோமென்று பதில் சொல்லப்பட்டதாகிறது.

இவ்வுலகத்திலும் அரசனை உபசரிக்கின்ற ஸேவகன் அவனுடைய சரீரத்தில் சந்தநத்தைப் பூசுவது, தலையில் புஷ்பங்களைச் சூட்டுவது, சரீரத்தை ஆடையாபரணங்களினால் அலங்கரிப்பது, அவன் காலைப் பிடிப்பது, முதலிய தேஹத்தின் உபசாரத்தினால் அவ்வரசனுடைய ஆத்மா த்ருப்தியடைந்து, வேண்டிய பலன்களை அளிப்பதையும் பார்க்கிறோம். இங்கு ‘சட்டையின்மேல் போட்ட பூமாலையினால் ஆத்மா ப்ரீதனுமாப் போலே’ என்கிற ஆசார்ய வாக்யமும் நினைக்கத் தகுந்தது. இங்கு அரசனை தேஹாத்ம விவேக மில்லாதவனாகச் சிலர் நினைத்தாலும், மயவற மதிநலமருளப் பெற்று இவ்வுலகங்களுக்கெல்லாம் சிரோபூஷணமாய் விளங்கும் நம்மாழ்வார் முதலான ஸர்வஜ்ஞர்களும் ‘துயரறு சுடரடி தொழுதெழு’ என்றும் ‘பரனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொல்’ ‘அடிக்கீழமர்ந்து புகுந்தேன்’ ‘பூவைவீயா மேனிக்குப் பூசும் சாந்தென் நெஞ்சமே’, என்றும் ஸர்வேஶ்வரனுடைய ப்ரீதிக்காக அவன் திருமேனியை அலங்கரிப்பதாலும் திருவடியையே தொழுவதாலும் திருமேனியை உபசரித்ததால் ஆத்மாவுக்கு ப்ரீதி உண்டாகுமென்பது ப்ரஸித்தமாகிறது.

வேறு சிலர் ஈஶ்வரனுக்கு ஶரீரத்தை அங்கீகரித்தால் அதனால் ஈஶ்வரனுக்கும் பிணி பசி மூப்புத் துன்பம் ஸம்பவிக்குமாகையினால் அவனுக்கு ஶரீரமில்லையென்று நிஶ்சயித்துவிட்டால், சரீரமில்லாததினால் அதற்கு ப்ரதிக்ருதியான விக்ரஹமில்லை என்கிறார்கள். இது ஈஶ்வரனுடைய சரீரத்தின் ஸ்வபாவமறியாததினால் உண்டான ப்ரமம். ‘ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:’ ‘ந பூதஸங்கஸம்ஸ்தாந:’ ‘ஜந்ம கர்ம ச மே திவ்யம்’ என்கிறபடியே அவ்வீஶ்வரனுக்கு அப்ராக்ருத திருமேனியாகையாலே பிணிபசி மூப்புத் துன்பங்களுக்கு ப்ரஸக்தியில்லை. ‘ஸ்வேச்சாமயம்’ ‘ஸம்பவாம்யாத்மமாயயா’ என்கிறபடியே ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தியுடையனான ஈஶ்வரன் தானாக எடுத்துக்கொண்ட தேஹமாகையினால் ஒருவித தோஷத்துக்கும் ப்ரஸக்தி இல்லை.

மற்றும் சிலர், விக்ரஹாராதநம் அறிவில்லாதவர்கள் செய்யவேண்டியது என்கிறார்கள். இதுவும் சரியல்ல. ப்ரம்ஹா தொடங்கி மநு இக்ஷ்வாகு முதல் ஸ்ரீராமன் வரையில் ஸ்ரீரங்கநாதனை ஆராதித்திருப்பதால், ப்ரம்ஹாவையும் ஸ்ரீராமனையும் அறிவிலிகள் என்று சொல்ல வேண்டிவரும். ஆகையினால் ‘ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்’ என்கிறதற்கு

ஈஶ்வர ஸாக்ஷாத்காரம் வரும் வரையில் விக்ரஹ பூஜநம் அவஶ்யம் என்கிறது. ஆக அதனால், விக்ரஹா ராதந விஷயத்தில் பிறர் சொல்லும் தூஷணங்களுக்கு ஸமாதாநம் சொல்லிவிட்டதால், விக்ரஹாராதநம் பண்ணுவது சாஸ்த்ரஸம்மதமென்றும் யுக்திக்கும் அநுகுணமென்றும் சொல்லப் பட்டதாகிறது.

பின்னும் சிலர், 'யச்ச கிஞ்சிஜ்ஜகத்ஸர்வம் த்ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா | அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:' என்றும், 'எஞ்ஞான்று மெங்கு மொழிவற நிறைந்து நின்ற' என்கிறபடியே ஸர்வ வஸ்துக்களிலும் ஸர்வ காலத்திலும் வ்யாபித்திருக்கிற ஈஶ்வரனுக்கு அர்ச்சா விக்ரஹத்தில் ப்ரதிஷ்டை என்பது எதற்காகச் செய்யப்படவேண்டும் என்கிறார்கள். இந்த ஸம்ஶயமும் அதற்கு ஸமாதாநமும், ஏற்கெனவே பாத்ம ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருப்பதால் அதையே இங்கு உதாஹரிக்கிறோம்.

ப்ரஹ்மா | 'வ்யாபினோ தேவதேவஸ்ய ப்ரதிஷ்டா கீத்ருஶீ ஸ்ம்ருதா | ஏதந்மே ஸம்ஶயஸ்யாஸ்ய ச்சேத்தா நிர்ணயதோ பவ''

'ப்ரதிஷ்டை' என்பதற்கு 'ஓரிடத்திலிருப்பது' என்று அர்த்தம். எங்கும் வ்யாபித்திருக்கிற பகவானுக்கு விக்ரஹத்தில் மாத்ரமிருப்பது எப்படி ஸம்பவிக்கும் என்று ப்ரஹ்மா கேட்டதற்குப் பகவானுடைய பதில் வாக்யமாவது: "ஸர்வஸ்ய ப்ராணிஜாதஸ்ய ஹரிரந்தர்கதோऽபி ஸந் | மந்த்ரவீர்யாச்ச ஸாதகஸ்ய ச பக்தியா | ப்ரதிமாயாம் விஶேஷேண ஸந்நிதத்தே ஹரிஸ்ஸ்வயம்''

எல்லா ப்ராணி ஸமூஹத்திற்கும், பகவானனவன் அந்தர்யாமியாக இருக்கச் செய்தேயும், 'இந்த விக்ரஹத்தில் நீர் விசேஷஸாந்நித்யத்தைச் செய்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்கிற ஆசார்யனுடைய பக்தியின் பெருமையினாலும் அவனால் ஜபிக்கப்படுகிற மந்தரங்களுடைய வீர்யத்தினாலும் அந்த விக்ரஹத்தில் ஹரியானவர் அதிக ஸாந்நித்யத்தைப் பண்ணுகிறார்.

'காமாநஶேஷாம்ஸ்தத்ரைவ ஹரிம் ஸம்ப்ரார்த்தயதே ஜந: | தேந ப்ரதிஷ்டாநாமேதத்ஸ்வர்த்தம் வதந்தே ஸுதி:'' இவ்வுலகத்திலிருக்கும் மனிதர்கள் அந்த விக்ரஹத்தில் ஸாந்நித்யத்தை யடைந்திருக்கிற ஹரியைக் குறித்தே அந்த விக்ரஹத்தினிடத்திலேயே தங்களுக்கு வேண்டிய ஸர்வாபீஷ்டங்களையும் ப்ரார்த்திக்கிறார்கள். ஆகையினால் இவ்வுலகத்தில் 'ப்ரதிஷ்டை' என்கிற பதமானது அர்த்தத்தோடு கூடினதாக ஆகிறது.

"யதா ச வஹ்நிஸ்ஸம்ஹநோ ந தஹந் வ்யாப்ய திஷ்டதி | காஷ்டேஷு மதநாத் ஸம்யோ ஜாயமாந: ப்ரத்ருஶ்யதே | தஹநாதீநி கர்மாணி

கரோதி ச யதாததம் | ததா ஸர்வகதோ விஷ்ணுர்ஜ்யோதிஷ்ட்வாத் ப்ராக்ய தேஜஸ: | ஜ்யோதிஷ்டேவ ப்ரகாஶதே மந்த்ரைராசார்யமஹிமாவாஸ:"—இதி | எப்படி அரசமரத்தினுடைய கட்டையிலிருக்கிற நெருப்பானது அந்தக் கட்டைக்குள்ளிருந்தும் அந்த மரத்தை கொளுத்தாமல், மத்தினால் கடைந்தவுடன் அந்த அக்நியானது அதிகமாக உண்டாகி ப்ரகாசிக்கிறதோ, தன்னிடத்தில் ஸம்பந்தித்த வஸ்துக்களையும் எரித்து விடுகிறதோ, அப்படியே எல்லா வஸ்துக்களுக்குமுள்ளுமிருக்கிற பகவான் எல்லா ஜநங்களுடைய கண்ணுக்கு முன்பு தோன்றாதிருந்தாலும் மந்த்ரங்களை அறிந்த ஆசார்யனுடைய மந்த்ரங்களுடைய மஹிமையினால் தன்னுடைய விக்ரஹத்தில் தன்னை ஆஶ்ரயித்தவர்களுக்கு வேண்டிய பலன்களைக் கொடுத்தும் ப்ரத்யக்ஷமாகவும் காணப்படுகிறார். ஆகவே, பகவான் எங்கும் வ்யாபித்திருப்பது போல விக்ரஹத்திலுமிருந்தாலும் வெளியில் ப்ரகாசிப்பதற்காக ப்ரதிஷ்டை அவஶ்யம் என்று முடிந்தது. இங்கு,

> "ஸ்தாபகஸ்ய தபோயோகாத் பூஜாயாஶ்சாதிஶாயநாத் |
> ஆபிரூப்யாச்ச பிம்பஸ்ய ஸாந்நித்யம் குருதே ஹரி:"

என்கிற பாஞ்சராத்ர வசநத்தில் கீழே சொல்லப்பட்ட ஆசார்யனுடைய மஹிமையோடு தினந்தோறும் செய்யப்படும் பூஜையினுடைய பெருமையினாலும் பிம்பத்தினுடைய அழகினாலும் பகவான் விக்ரஹத்தில் அதிகமாக ப்ரகாசிக்கிறான் என்று சொல்லப்படுகிற இரண்டு காரணங்களும் கவனிக்க வேண்டிய விஷயங்கள். இது வரையில் தேவசப்தார்த்தமான அர்ச்சா விக்ரஹத்தைப் பற்றி விஷயங்கள் சொல்லப்பட்டன.

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபாநு ஆனிமீ

1௳	திங்கள்	—	சூந்யதிதி.
11௳	வியாழன்	—	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி.
16௳	செவ்வாய்	—	த்விதீயை த்ருதீயை திதித்வயம்.
17௳	புதன்	—	சதுர்த்தி திதி
24௳	புதன்	—	ஏகாதசி திதி.
25௳	வியாழன்	—	ஏகாதசி வ்ருதம்.
26௳	வெள்ளி	—	த்ரயோதசி திதி.
27௳	சனி	—	அதிதி.
28௳.	ஞாயிறு	—	சதுர்த்தசி திதி.
31௳	புதன்	—	மிதுன சுக்ல த்விதீயை திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வராஹ [illegible] நம:

பாசுரங்களின் பகுதி

[வித்வாந் ஸ்ரீ உப. ஏ. வி. கோபாலாசார்யர், எம். ஏ., பி. எல்.]

[ஸஞ்சிகை 4: பக்கம்-113 தொடர்ச்சி]

4. சதுரமா மதிள்சூ ழிலங்கைக் கிறைவன் தலைபத்
துதிர வோட்டியோர் வெங்கணை யுய்த்தவ னோதவண்ணன்
மதுரமா வண்டுபாட மாமயிலா டரங்கத்தம்மான் திருவயிற்
றுதரபந்தன மென்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே.

சதுரமா மதிள் சூழ் இலங்கைக் கிறைவன்—அரக்கன் ஊரும் மதிள்களும் சதுரமாய் ஸமமாய் அமைந்துள்ளது. அவன் உள்ளமும் சீலமும் விஷமமாய் அசதுரமாய் அமைந்ததே! இந்த்ரியங்களுக் கல்லவோ காவல்மதிள்கள் வேணும்? இந்த்ரியங்களுக்கு அரணேயில்லையே. ‘இந்த்ரியைரேவ நிர்ஜித:’ என்றன்றோ மந்தோதரி அழுதாள். இலங்கை யென்பது ஜீவனுடைய தேஹம்; சுற்றிலுமுள்ள ஸமுத்ரம் ஸம்ஸார ஸாகரம்; பத்துத்தலைகளும் பத்து இந்த்ரியங்கள்; பத்துத் தலைகளையுடைய மனது பத்துத் தலையுடைய கோர நிஶாசர னென்பர். ‘தஶேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம்’ என்ற ப்ரமாணவசநம் ஆழ்வார் திருவுள்ளத்தில் ஓடுகிறது. இரண்டாம் பாசுரத்தில் ‘நிஶாசரர்’ என்று ‘ரஜநீசர’ ஶப்தத்தை ஸூசித்தார். இங்கே ‘தலை பத்தும்’ என்று ‘தஶேந்த்ரியாநநம் கோரம்’ என்பதை ஸூசிக்கிறார். [illegible]’ என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்தபடி பெரிய பெருமாள் திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவித்துக்கொண்டே பரஸ்வரூபத்தில் யோகாப்யாஸம் செய்கிறார். பத்து இந்த்ரியங்களையும் தலைகளாக உடைய மனம் நம்மை அழச்செய்கிறது. மனதே ராவணனிலும் கோரமான நிசாசரன். அந்தத் தலைபத்தோடு மனதை உதிர ஓட்டவல்லது ராமத்யாநம். ‘ரமந்தே யோகிந: ஸ்மின்’ என்பர். ராமனிடம் யோகிகள் ரமிப்பர். மனமென்னும் கொடிய ராவணனையும் கொடிய பத்து இந்த்ரியத் தலைகளையும் உதிர வோட்டும் ஓர் வெங்கணையை யுடையவன் ராமன். இந்த யோகப்ரகரணத்தில் அந்த வ்ருத்தாந்தத்தை மறுபடியும் நினைந்து உருகுகிறார். “தஶேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம்” என்கிறபடியே முமுக்ஷுக்களுடைய மநஸ்ஸு அஹங்கார மமகார தூஷிதமாகாதபடி பண்ணிக்கொடுக்கிற சக்ரவர்த்தித் திருமகனுடைய சரித்ரத்தை முன்

னிட்டு நானும் என்னுடையதன்று, மற்றுமெனதொன்று மில்லையென் கிற நமஸ்ஸில் அர்த்தத்தை மறைபொருளாக அநுஸந்திக்கிறாராகவு மாம்' என்று முநிவாஹநபோகம்.

ஓர் வெங்கணை உய்த்தவன்—(1) அவன் திருவுள்ளத்தில் வெப்ப மென்பதே கிடையாது. 'க்ரோதமாஹாரயதீவ' என்று கோபத்தை ப்ரயத்நத்தால் ஆரோபித்துக்கொள்வது மட்டும்; க்ரோதம் நாடகமே; உள்ளத்தில் கருணையே தத்வம். (2) வெங்கணை இரைக்கு ஆசைப் பட்டது. அதன் ஆசையை பங்கப்படுத்தாமல் அதை ஆஶ்வாஸநம் செய்தார். (3) ஓர் வெங்கணையால் ஶத்ருவின் அந்தப் பாபஜந்மத்தைத் தொலைத்து அவனையும் உய்யச் செய்தார்.

ஓதவண்ணன்—ஸமுத்ரவர்ணன். வெங்கணை யென்றதும் 'ஶராம் ஶ்சாஶீவிஷாகாராந்' என்ற ஸாகரஶோஷண வ்ருத்தாந்தம் திருவுள் ளத்தில் ஓடுகிறது. கருங்கடலுக் கெதிரே பெரியதோர் நீல தேஜஸ் ஸமுத்ரமாக ப்ரதிசயநம் செய்த அவஸரம். ராமஸமுத்ரத்தை நினைத்து 'ஓதவண்ணன்' என்கிறார். சயனம் பெரியபெருமாள், அவர் ஓர் குட்டி ஸமுத்ரம், 'ஜலதிஶிம்ஹஸம்ஹஸ்ரஶ:'

மதுரமா வண்டுபாட—இவர் பாட்டினால் கண்டு வாழ்ந்து வந்தவர். நாரதரைப்போல் இவர் வாத்ய காந ஸஹகாரத்தோடு யோகமென்னும் லயத்தைப் பெற்றுக் களித்து வந்தவர். பாடுபவருக்கு வாத்ய ஸஹகாரத் தைப்போல் கூடவே பின்பாட்டுக்காரரும் சேருவது மிக ஹோக்யமா யிருக்கும். அரங்கத்தில் மதுரமாக வண்டுகள் ரீங்கார காநம் செய்வதைப் பக்கஸாதனமாக வைத்துக்கொண்டு இவர் திருக்காவிரியில் அரங்கனைக் காந யோகத்தால் த்யாநம் செய்தார். இவர் காதில் இந்த வண்டுகளின் மதுரகாநம் விழுகிறது. அரங்கத்தில் பாடும் வண்டுகள் ஆநந்த பரவ ஶமாக அரங்கனையே பாடுவதாக இவர் அநுஹவம். 'ரதமேவ காயந்தி' என்று அந்தராதித்ய வித்யை. வீணையில் பாடுவதெல்லாம் பரமாத்மா காநமே. வண்டுகளோடு தாமும் ஓர் மதுகரமாய் அரங்கனைப் பாடி அநுஹவிக்கிறார். அரங்கத்தில் பாடும் வண்டுகள் மாவண்டுகள். மஹ நீயமான வண்டுகள். 'ஐஹிகாநந்ஜதிபுக் ஷாவரவாஶ்ரயணே' என்றபடி அரங்கத்தில் எவ்வித ஜந்மமும் மஹநீயம்.

மாமயிலாடு அரங்கத்தம்மான்—அரங்கத்தில் பாடல் மட்டும் போதுமோ? நாடகமேடையில் 'ஆடல்' அல்லவோ ப்ரதாநம் என்றால், மயில்கள் ஆடுகின்றன. மயில் என்பது நீலகண்டம். நீலகண்டர் ஆநந்த நர்த்தநம் செய்வதாகவும் அநுஹவம் நடநத்தில் வல்லவரான ரஸிகஶிரோமணி அம்பலத்தில் ஆடுமுன்பே அரங்கத்தில் அரங்கன் முன் நர்த்தநம் செய்யாம லிருப்பரோ? அரங்கன் ரங்காத்யக்ஷன்.

திருவயிற்று உதர பந்தனம்—ப்ருந்தாவந வநத்தில் மயில்களை யும் கூட்டிக்கொண்டு பாடி ஆடியவன் கோவலன். 'கூநாந்ருத்யதி

ந்ருத்யந்தம் பர்ஹிணம் ஹாஸயந்து க்ருஷ்ண:’ என்று ஶுகர் பாடினார். ஆடும் மயில்களோடு எதிர்நின்று தாமும் நர்த்தநம் செய்தார் கொண்டல் வண்ணனான கண்ணன். க்ருஷ்ண மேகத்தைப் பார்த்து மயில்கள் மேகமென்றே நினைத்து ஆனந்தத்தால் நர்த்தநம் செய்தன. மேகத்தை மயில்கள் பார்த்திருந்தாலும், மேகம் நர்த்தநம் செய்வதைக் கண்டதில்லை. இந்தக்ருஷ்ண மேகம் பூமியில் இறங்கித் தங்களருகே நின்று தங்களோடு கூட நர்த்தநம் செய்வதைக் காணவே, ஆடும் மயில்களுக்கும் சிரிப்பு வந்து விட்டதென்று ஶுகர் அநுபவித்த ரஸம். மயில் நர்த்தநத்தை நினைத்ததும் கோபாலன் நினைவும் வந்தது. திருவயிற்றை வர்ணிக்கையில் ‘தாமோதரம்’ என்ற திருநாமத்தை யளித்த கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ட வயிற்றுத் தழும்பான உதரபந்தநத்தை மறப்பரோ? அது குந்தியும், ஆழ்வாரும், ஆழ்வானும் ஈடுபட்ட உதரபந்தம். ஸ்ரீ மதுரகவியும் ஆழ்வாரைப் பாட வாயைத் திறக்கையிலேயே அதிலே ஈடுபட்டவர். ‘மதுரமா வண்டு’ என்று மதுரகவியாழ்வாரின் நினைப்பும் ஒருவாறு உள்ளது. ‘அடியார்க் கென்னை யாட்படுத்த விமலன்’ என்பதும் மதுரகவியாசிரியருக் காட்படுத்திய பேற்றை நினைத்ததுமாகும். ‘மதுரகவி தோன்றக் காட்டிய தொல்வழி’யல்லவோ அது? உதர பந்தனம் என்பது அரைஞாண் மாலையையும் சொல்லும். ப்ராசீந வ்யாக்யாநங்களெல்லாம் அப்படியே. ‘ந்ருஸிம்ஹம் வக்ஷாம்ஸ்த்ரீகிரணாபவிரஹ்’ ‘ரங்கராஜன்’ அரைஞாண் மாலையையும் அநுபவிக்க வேண்டியது. இவர் ரங்கராஜா வென்பதால் அந்த அநுபவமும் வேண்டியதே. ஸாவித்ர புருஷன் திருமேனி முழுவதும் ஹிரண்யாபரணங்களாய் ஹிரண்மயமாக ஜ்வலிக்கின்றதென்று ஓர் அத்வைத வ்யாக்யாநத்தினனுபவம்.

என்னுள்ளத்துள் நின்று உலாகின்றதே—முதல் பாசுரத்திலும், இங்கும், பின் பாசுரங்களிலும் அவ்வவயவங்கள் இவ்வாழ்வாரை நெருங்கி வலுவில் கவரும் வ்யாபாரங்களின் வர்ணநத்தைக் காண்கிறோம். பகவத் த்யாந ஸோபாநத்திலும், பகவதவயவ வ்யாபாரங்களே முந்திக் கொள்வது விஶேஷமாக வர்ணிக்கப்பட்டது. பாதாம்போஜத்தின் ப்ரதிபலநம் நாபி செய்யும் ஸம்ப்ரீணனம், திருமார்பு செய்யும் ஸந்தாப ஶமநம், திருக்கைகள் ஆனையைக் கட்டி வைப்பதுபோல் மநோ கஜத்தைக் கட்டி நிறுத்துவது, திருமுகம் நம் மனத்தில் நுழைந்து விஹநம் செய்வதும் வர்ணிக்கப்பட்டன. இவையெல்லாம் ‘ஆதி’ என்னும் பதத்தாலும் வ்யஞ்ஜிதம். என் உள்ளத்துள் புகுந்ததும் என் மனம் ஓர் ஆனந்தக் கடலாகி அலைக்கிறது. உதரபந்தனமும் அதில் ஊசலாடுகிறது. என் மனக்கடலும் பொங்கி அலைக்கிறது. உதரபந்தனமும் ஹர்ஷத்தால் அங்கு மிங்கும் அசைகிறது. ‘ஸா ரோமம் விரோஹயதி’ என்றாள் குந்தி. தானும் மோஹித்து ஊசலாடி, என் மனத்தையும் மோஹித்து ஊசலாடச் செய்கிறது.

'உதிர வோட்டி' என்றதால் முன்பு முதல்நாள் பூசலில் தலையை உதிர்க்காமல் ஓட்டினதை வ்யஞ்ஜநம் செய்கிறார். வணங்காத தலைகளை அன்று வணக்கி வெட்கச் செய்தும், மரணத்திலும் கொடிய அவமானத்தைச் செய்தும் மையல் தீ மனத்தைத் தவிர்க்கவில்லை. தம்பி விபீஷணன் அந்தரிக்ஷமான விஷ்ணு பதத்தில் நின்றுகொண்டு 'பெருமாள் தோளையே அரணாகப் பற்றினான்' என்று நாயனார். விஷ்ணுபதமென்னும் ஆகாயமே அவனுக்கு அரண். சதுரமா மதிள் சூழ் இலங்கை யரணைவிட்டதே அவனுக் கரண். 'உதிர ஓட்டி ஓர் வெங்கணை யுய்த்தவன்' தலைகள் உதிர்ந்தது முன்னே, சரம்விட்டது பின்பெனலாம்படியான வேகம். 'பனங்குலை யுதிர்த்தாப் போலே யுதிர' என்று பிள்ளை. 'ரக்ஷோ ஶிரஸ்ஸுமநோவநாய 'அரக்கன் தலைகளாகிய பூங்கொத்தைக் கொய்து விட்டு' என்று ஹம்ஸ ஸந்தேசம். 'அங்குளி நுனியால் கொல்வதாகும்.' விரல் நுனியால் பூக்கொய்வது போல் கொய்து அப்பூக்களைக் கொண்டு தேவர்கள் சித்தத்தை ஆராதித்து; 'ராஜா வெள்ளைச் சட்டையிட்டால் அடியார் கறுப்புச் சட்டையிடுவர்' என்று பிள்ளை. 'மாயந்தி கேசிச நாத்யந்தி கேசிச" என்று வாநர முதலிகள் ஆடியதை நாயனார் காட்டினார். "தாமோதரம் வந்தகம்" என்றபடி 'பந்தகதருக்கு மோக்ஷ ஹேதுவான தாமோதரத்வத்தை வெளியிடாநின்ற திருவுதரத்தில்' என்று ஸ்வாமி தேசிகன். உலகங்களெல்லாவற்றையும் கொள்ளும் வயிறு அதைச் சுற்றிக் காட்டிய அரைநூன்மாலை என் சிறு நெஞ்சத்தில் ந்ருதயத்துடன் உலாவுகிறது; இஃதென்ன விந்தை! நெஞ்சு அநந்தமாக விகஸித்து விட்டதோ! ஜ்ஞாநம் அநந்தமாகும் ஸமயம்-'குணதிகரான நீலகண்டங்கள் ந்ருத்தம் பண்ண' என்று ஹோமம்.

5. பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத் தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி யென்னுள் புகுந்தான்
கோரமா தவம்செய்தனன்கொல் அறியேன் அரங்கத்தம்மான் திரு
வாரமார்ப தன்றோ அடியேனை யாட்கொண்டதே.

பாரமாய பழவினை பற்றறுத்து.—(1) தாமோதரனையும் அவன் திருவயிற்றில் தாம்புத் தழும்பையும் அனுபவித்தார். "தாமோதரம் வந்தஹாரம்" என்று நிர்வசந ஸ்லோகம். 'கட்டுண்ட தாமோதரனை ஹாவனைசெய்தால் பாரமாய பழவினைக் கட்டெல்லாம் நிஸ்ஸேஷமாகக் கழன்று அகலும்' என்று யாதவாப்யுதயத்தில் அருளிச் செய்யப்பட்டது. 'தாமோதரன் உதரவந்த ஹாவனைசெய்த தக்ஷணமே பாரமாய பழவினைப் பற்றறுந்தது' என்று ஸர்வ ந்த விச்சேத ரஸத்தை அநுபவிக்கிறார். 'பித்யதே ஹ்ருதய க்ரந்திஃ....க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி' (2) பழவினையால் வருவது பழம் ப்ரக்ருதி வாஸனை; தகாத விஷயங்களில் பற்று. கண்ணனைக் கட்டிய கயிற்றின் த்யாநம் அநாதியும் அநந்தமு

மான வினைக்கயிறுகளை அறுத்தது. (3) விஷம் விஷத்திற்கு ஶத்ரு. கண்ணன் கட்டுண்ட கயிறு வினைக் கயிறுகளுக்கு ஶத்ரு. யஶோதையின் ஸ்நேகக் கயிறுதான் முடிவில் கட்டுண்ணச் செய்தது. கண்ணனிடம் ஸ்நேஹபாஶம் ஸகலவினைப் பாஶங்களையும் அறுத்து விடும். (4) வினைச் சிறையிலிருந்து விடுவித்து, பிறரைக் கண்ணெடுத்துப் பாராத ஏகாந்த ஸ்நேஹத்தை உண்டுபண்ணி, தான் திருவின் அந்தப்புரமான திருவார மார்பில் சேர்த்துக்கொண்டு கௌஸ்துப ரத்நமாகத் தன் திவ்யத் திரு மேனியோடு சேர்ந்து திருவுடன் ப்ரகாஶிக்கச் செய்கிறார். (5) 5, 6-ல் நாராயண சப்தார்த்தம் என்று ஹொமம். 'நாராயண' என்கையிலே திருவும் திருமார்பில் ஜ்வலிக்கிறாள். 'அந்தப்புர ஸ்த்ரீகளைப் போலே அந்யருக்குக் கூறில்லாதபடி பண்ணி அஸாதாரண கைங்கர்ய ரஸத்தைத் தந்து மேலொரு காலத்திலும் மாறாதபடி வைத்தான்' என்று ஹொமம்.

என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்—(1) திருமார்பு, இவர் ஸ்ரீவத்ஸமாக நித்ய வாஸம்செய்யும் ஸ்தாநம் 'வாரமாக்கி' என்பது வாரக்காரனாக, கிங்கரனாக, அடிமையாக, குடி குடியாளாக ஆட் கொண்டதைச் சொல்லுகிறது. அடிமையை வாரமாக ஆட்கொள்ளு வார்கள். தன் தொண்டக் குலத்தில் புகுரச் செய்தான். (2) வாரம் என்பது வரிக்கப்படுவதைச் சொல்லும். என்னை வரித்து என்னைத் தனக்கு வரணீயனாக்கினான். 'ப்ரியதம ஏவ வரணீயோ ஭வதி' என்று ஸ்ரீ ஭ாஷ்யம். 'பரமபுருஷ வரணீயதாஹேது ஗ுணவிஶேஷ விரஹி ணாம்' என்ற ஸ்ரீ ஭ாஷ்ய ஸூக்தியையும் நினைக்கவேணும். (3) கந்நி கையை வரிப்பர்; அந்தப்புரத்திற் கொண்டுபோய் வைப்பார். என்னை ப்ரியையாக வரித்துத் திருவின் அந்தঃபுரமான திருமார்பில் என்னையும் வைத்தான்.

வைத்ததன்றி என்னுள் புகுந்தான்:—(1) நான் அவனுள் ப்ரவே ஶிக்கவேணும். 'விஶதே தத³நந்தரம்' 'வெஷ்டாஂவவாஂதவ' என்று கீதை. அவன் முந்திக்கொண்டு என்னுள் ப்ரவேஶித்தான். அவன் ஆதி. 'தத³நு ப்ரவிஶ்ய' என்று ஶ்ருதி சொல்லியபடி அநுப்ரவேஶத் தில் அவன் முன்பு வழி காட்டுகிறவன். அவன் செய்வதை நாமும் அநு கரணம் செய்ய ப்ராப்தம். இல்லாவிடில் ஸாஹஸம். (2) 'தஸ்யுபரி க்ரஹீதமான வீட்டிலே தஸ்யுக்களை யோட்டிப் புகுருமாப்போலே புகுந் தான்' என்று போகம் (3) விடாய்த்தவன் தடாகத்தினுள்ளே முழு குமாப்போலே என்னுள்ளம் புகுந்தார் என்று பிள்ளை.

கோரமாதவன் செய்தனன்கோல் அறியேன்:—(1) என்னை வரிப்ப தற்கு ஹேதுவான ஓர் குணவிஶேஷம் எனக்கு இருக்கவேணும். காரண மில்லாமல் கார்யம் பிறவாது. என்னை வரித்து என்னுட் புகுந்த கார்யத் தைக்கொண்டு அந்த ந்யாயத்தால் அதற்கு ஓர் காரணத்தைத் தீர்மானிக்க வேண்டும். அது நான் செய்ததாயிருக்கவேண்டும். நான் செய்த நல

மொன்றுமே எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரியாமலே நான் அபுத்தி பூர்வகமாக வு௱ணக்ஷதலிபி ந்யாயம்போல, அவன் கருணையால் நலமென்று நினைக்கக்கூடிய ஓர் ஸு௱க்ருதம் நான் ஏதாவது செய்திருக்கலாம். செய்ததை நான் அறியேன். அறியாமற் செய்தது ஏதேனுமொன்று உளதோ அறிகிலேன் என்கிறார். (2) 'மோக்ஷயிஷ்யாமி' என்கிற ஸங்கல்பரூபமான தபஸ்ஸை அவன் எனக்குப் பதிலாகப் பண்ணினான்போல்' என்று போகப் பொருள். கங்கையிற் புனிதமான காவிரி நடுவு பாட்டிலே தமஸ்ஸு௱. 'தவ கூரெவடுந'

அரங்கத்தம்மான் திருவாரமார் பதன்றே—(1) திருவுக்கே ஸமர்ப்பிக்கப்பட்ட திருமார்பு அவளுக்கு ஏகதேசஸத்தில் பாத்யப்பட்டது. தனக்கு ஹோம வ்ருஜிக்காக தன் ஸ்தநாதி அவயவங்கள் போன்ற அநந்தகோடி நித்ய முக்தர்களையும் அங்கே சேர்த்துக்கொள்கிறார். (2) திருவுக்கு வாரமான மார்பு அந்த மார்பில் என்னையும் தனக்கு வாரமாக்கி வைத்தான். இதென்ன கருணையிருந்தபடி!

அடியேனை ஆட்கோண்டதே—அடிமையைத் தேடிவந்து என்னை அழைத்துப்போய்த் திருமார்பில் சேர்த்துக்கொண்டார். திருமார்பில் சேர்க்கையென்பது ஸர்வஸ்வஹ௱தமான பரிஷ்வங்கத்தின் தானமேயாகும்; பக்தரில் முதல்வரான ஹநுமாருக்குக் கிடைத்த பரிஷ்வங்கம் போல. இவர் ஸேவகராக வீற்றிருப்பது திருமார்பில். 'ஸ்ரீவத்ஸேந ப்ரயிதவிஹவம் ஸ்ரீபதந்யாஸதந்யம்' என்று ஸோபாநத்தில் இந்த அநுபவம் வ்யஞ்ஜிக்கப்பட்டது.

'என்னுள் புகுந்தான்'—பழையபடியே துஷ்கர்மங்களைப் பண்ணி நான் அகலக் கூடுமென்று பார்த்து அவை மேலிடாதபடி என் நெஞ்சிற் புகுந்து தன்னுடைய வாஸநா பலத்தாலே அவை தேய்ந்தறும்படி பண்ணியிருந்தான்' என்று நாயனார். 'பேரே னென்றென் னெஞ்சு நிறையப் புகுந்தான்' என்று 10-ம் பத்தில் பரமபதம் செல்லுமுன் திருவாய்மொழி. 'அநச்நந்ய:' என்கிறபடியே இத்தோடோட்டற்றிருக்குமவனுக்கு இத்தாலல்லது செல்லுகிறதில்லை யென்கிறது' என்று பிள்ளை. முன்பு அநபஹதபாப்மாவாய், சுவஊஹொடிதியாரிக்கையில், அஸங்கனாய் ஸங்கத்திற்கே கூசி ஒதுங்கியிருந்தவன், தன்னைப்போல் அபஹதபாபமாவானவுடன், அத்யந்த ஸங்கத்துடன் மேல் விழுந்து, 'ஸர்வாந்காமாந் ஸஹ அச்நுதே, ஸஹமோடிதே' என்று ரஸம்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

திருமாமகளின் திருமணம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள், பேங்களூர்.]

"𑌕𑌾𑌯𑌾𑌧𑌵𑌸𑍍𑌸 𑌚 𑌵𑌾𑌯𑌸𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌬𑌨𑍍𑌧𑌵𑌦𑍍𑌰𑍌𑌪𑌦𑍀
𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌸𑍁𑌮𑍁𑌖𑌗𑍋𑌪𑌵𑍍𑌰𑌜𑌜𑌨𑌾𑌮𑍍𑌬𑌰𑍀𑌷𑌾𑌦𑌯𑌃 ।
𑌭𑌵𑌤𑍍𑌪𑌦𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾 𑌭𑌯𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌮𑌵𑌾𑌪𑍁𑌰𑍍𑌯𑌥𑌾
𑌸𑌹𑌸𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌵𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌰𑌙𑍍𑌗𑌨𑌾𑌥 𑌕𑍃𑌪𑌯𑌾 ॥"

[ரங்கநாதனே! கயாது தேவியின் புத்ரனான ப்ரஹ்லாதன், ஜயந்தனென்னும் காகம், கஜேந்திரன், த்ரௌபதீ, விபீஷணன், ஸுமுகனென்னும் நாகம், கோப ஜனங்கள், அம்பரீஷன் முதலியவர்கள் எப்படி நன்றாக உம் திருவடிகளை யாஶ்ரயித்துப் பயத்திலிருந்து விமோசனத்தை அடைந்தார்களோ, அப்படியே நாங்களும் உடனே உம்மாலே பய விமோசனத்தை அடைவோமாக]

திருமாமகளின் திருமணம் தந்தியிலும் தபாலிலும் ஒரு வாரத்தில் நிச்சயிக்கப்பட்டது. நான்கு வருஷ காலமாய்த் தேடாத இடமேயில்லை. பெற்றோர்களும் உற்றோர்களும் இக் கன்னிகைக்குக் கணவனைக் கடவுள் ஸ்ருஷ்டிக்கவேயில்லையோ வென்று ஏங்கியிருந்தார்கள். அப் பெண்ணின் அதிருஷ்டததினால் திடீரென்று பெருஞ் செல்வமும் நற்குணமுமுடைய கணவன் கிடைத்தான். பையன் படிப்பு முழுவதும் முடிந்து உத்யோகத்தி லமர்ந்து மூன்று வருஷமாகி யிருந்தது. வரும்படி எப்படி யிருந்தாலும், கைராசியுடையவன் என்னும் பெயரெடுத்து வைத்திய நிபுணனாய் விளங்கினான். வரனின் தாய் தந்தையர்கள் பெருந் தன்மையும் மேன்மையுமான குணம் பொருந்தியவர்கள். சீர் வகையரா உங்களிஷ்டம்போல் செய்யுங்களென்று கூறிவிட்டனர். பெண் வீட்டாருக்கு ஒன்றும் செய்ய ஸாவகாச மில்லாமையால், மொத்தமாய்ப் பத்தாயிரம் ரூபாய் தம்பதிகளின் பேரில் ஸ்ரீநிவாஸ நிதியில் கட்டிவிட்டனர். கல்யாணம் திருச்சானூரில் செய்வதாக அப்பெண்ணுக்குப் பிரார்த்தனை. ஸம்பந்தி வீட்டார்கள் இருதரத்தாரும் நான்கு தினம் முன்னதாகவே மிகவும் கோலாஹலத்துடன் இரண்டு சத்திரங்களில் வந்து இறங்கினார்கள். அவர்கள் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஒவ்வொருவரும் தாங்களே தங்கள் புத்தியினாலும் சக்தியினாலும் ஸகல காரியங்களும் செய்வதாகவும், தங்கள் உதவியின்றி ஒரு காரியமும் நடைபெறாதென்றும் எண்ணிக்கொண்டிருந்தனர். பெண்ணின் பிதாமஹர் ஸத்குணமும் தெய்வ பக்தியும் வாய்ந்தவர். ஆனால் "தான்" என்னும் அஹம்பாவம் அவரை

யும் விடவில்லை. அவர், “நானில்லாவிடில் இவ்வரன் எப்படிக் கிடைத்திருக்கும்? ஆஹார நித்ரையின்றி அலைந்து திரிந்து தேடினேன்; இவ்வரனிருக்குமிடம் ஒருவருக்குமே தெரியவில்லை; என் புத்தியினுல் நான் கண்டு பிடித்தேன்’ என்று ஒவ்வொருவரிடமும் உரைத்துக்கொண்டிருந்தார். மணமகளின் மாதுலர் “நீங்கள் வரன் தேடியது இருக்கட்டும்; ஸ்ரீநிகேதநனுக்கும் திருமாமகளுக்கும் ஜாதகம் சரிவரப் பார்த்துக் கூறியது யார்? எவர்களோ அறைகுறை பண்டிதர்களென்னும் பெயர் பூண்டவர்கள் ஜாதகம் சரியாயில்லை யென்று சொல்லிவிட்டார்களாம். எவன் ஜ்யோதிஷ சக்ரவர்த்தி யென்று பிருது அவர்களுக்குக் கொடுத்தானே அவனைச் சொல்லு. குருவின் பார்வை பலமாகவிருப்பது அவன் கண்களில் விழவில்லையே! கல்யாணம் நடத்தியாக வேண்டும். அவன் நீசனுக இருந்தால் நமக்கென்ன? விவாஹத்தை நிறுத்த வேண்டாமென்று யோஜனை செய்துகொண்டிருந்தார்கள். நானல்லவோ சரியான காரணங்கள் பல காட்டிக் கல்யாணத்தை நிச்சயம் செய்தேன்” என்று பலவாறுக வந்தவர்களுடன் வாதாடிக்கொண்டிருந்தார். ஸ்ரீநிகேதநனின் சித்தி “இப்பேர்ப்பட்ட அழகும் குணமும் பாட்டும் படிப்புமமைந்த இப் பெண்மணியை நானல்லவோ தேர்ந்தெடுத்தேன். இக் கந்நிகைக்குப் போன வருஷமே கல்யாணமாகிவிட்டதென்று அனைவரும் நினைத்துக்கொண்டிருந்தார்கள். நான் போய்ப் பார்த்து நிச்சயம் செய்துகொண்டு வந்தேன்” என்று ஓயாமல் பெருமை பேசிக் கொண்டிருந்தாள். இவர்களருகில் ஓர் பைங்கிளி இருந்திருந்தால் அவர்கள் வார்த்தைகளைப் பிசகின்றிக் கற்றுக்கொண்டிருக்கும். நல்மொழியோ வீண் பேச்சோ எதையும் கிளிகள் கற்றுக்கொள்ளும். இதைப்பற்றி ஸ்ரீதேசிகமணி பாதுகா ஸஹஸ்ரத்தில் அருளிச்செய்திருக்கும் அழகான ச்லோகமாவது:

“முநிவரிஷு நீதம் மாதலிரக்ஷணம் தே
முஹுர நகுயபதோ ஸம்ஜாவாவஸ்யகாதோ: |
உஷஸி நிஜகுலாயாத் தீதா ஷண்கேஷு
ஸ்யஜேவி வதரக்ஷே ஸௌஸ்ராமே ஸ்ரயயதி ||”

அதாவது: முன்பு தண்டகாரண்யத்தில் மஹர்ஷிகள் கூட்டம் கூட்டமாய்க் கூடிச் சக்ரவர்த்தித் திருமகனு யவதரித்த ஸ்ரீராமபிரானுடைய எல்லையற்ற கல்யாண குணங்களை ஓயாமற் புகழ்ந்து பாடுவார்களும், அவைகளில் ஸ்ரீராம பத்ரன் ஒப்புயர்வற்ற பாதுகைகளைச் சாத்திக் கொண்டு விசுவாமித்ர முனியின் யாகத்தை ரக்ஷிப்பதன் பொருட்டும், பிறகு அன்னை ஜானகியை மணப்பதற்காகவும் பரமக்ருபையுடன் எழுந்தருளினர். அப்பொழுது அம்மணி பாதுகையின் மஹிமையால் கல்லுருவாய்ந்த கௌதம மஹர்ஷியின் பத்னியான அஹல்யாதேவி, மாசு மறுவற்ற பதிவ்ரதா சிரோமணியாகப் பெண் வடிவம் பெற்று விளங்கினுள்,

என்று சொல்வதைக்கேட்டுக்கொண்டிருந்த மனோஹரமொழிகளையுடைய கிளிகள் உதய காலத்தில் தங்கள் கூடுகளிலிருந்து வெளிக் கிளம்பி தாங்களும் அம்முனிவர்க ளுரைத்த பகவானுடைய திவ்ய கதைகளைத் திரும்பித் திரும்பி சொல்லிக்கொண்டிருந்தன என்று அருளிச் செய்தார். கிளிக்கும் குழந்தைக்கும் நாம் ஸாரமுள்ள நன்மொழிகளையும் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் படக்கூடிய பகவந் நாமங்களையும் கற்றுக் கொடுத்தால் கர்ணாம்ருதமான அம்மொழிகளையே அவை கூறும். அப்பொழுது தெரிந்த பெரியோர்களும் நன்மொழிகளைக் கிளி கூறினாலும் சரி, குழந்தைகள் கூறினாலும் சரி அதன்படியே ஆசரிக்க வேண்டுமென்று சொல்வார்களன்றோ!

ஊரிலிருந்து வந்தவர்கள் ஓர் அடியிலிருக்கும் ஆலயத்திற்குச் சென்று அவ்வன்னையை வணங்காமல் விவாஹ ஸம்ப்ரமங்களில் முழுகிக் கிடந்தார்கள். பொழுது புலர்ந்தது; கீழ்வானம் வெளுத்தது; பறவையினங்கள் இனிமையாய்க் கூவின; வண்டினங்கள் மனோஹரமாய்ப் பாடின; மந்தமாருதம் ஸுகமாய் வீசத்தொடங்கியது. செங்கழுநீர் ஸுந்தரமாய் மலர்ந்தன. ஆம்பல்வாய் அழகாய் மூடின. அந்தரத்தில் நக்ஷத்ரக் கூட்டங்கள் ஒளியிழந்தன. பெரியவர்கள் ஸமஸ்த பாபங்களையும் போக்கடிக்கும் ஹரிநாம ஸங்கீர்த்தனத்துடன் துயிலெழுந்தனர்.

இக்காலத்தில் அனேகமாய் அனைவரும் அதிகாலையில் காபி தேவதையை ஸேவிக்காமலிருப்பதில்லை. கெடுதலென்று தெரிந்தும் மேனாட்டுப் பழக்க வழக்கங்களில் சிலவற்றை நாம் ஆதரிக்கிறோம். அதிலும் விவாஹ காலங்களில் இக்காபி விஷயமாய் அநேக மனஸ்தாபங்களும் ஸம்பவிக்கின்றன. புலவர்களென எண்ணம் கொண்ட சிலர் "கல்யாண காலங்களில் காபி அதிகமாய் வழங்க வேண்டும். அது நாசமில்லாத நிதி. அது அதிக ஆனந்தத்தை யருளும். காபியினால் கருணை முதலிய ஸத்குணங்கள் உண்டாகும். ஏராளமாய் ஸம்பத்தை அருளும் வேதத்திலேயே சொல்லியிருக்கிறது. நம் ஆசாரியனே "கல்யாணனம் அவிகலநிதி: காபி காருண்யஸீமா" என்று அருளிச் செய்திருக்கிறாரே" என்று குதர்க்கமாய்ப் புலம்பிக்கொண்டு தாராளமாய் அருந்துகிறார்கள். இப்படி இவர்கள் காரியங்களை முடித்துக்கொண்டு ஸாவகாசமாய் ஸந்நிதிக்குத் தாயாரை ஸேவிக்கப் புறப்படுவதற்குள், ஸ்லோகத்திற்கு ஸரியான அர்த்தமுடைய மங்களங்களுக்கு நிதியைப் போன்றவளும், மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத கருணைக்கு எல்லை நிலமானவளும், நித்யானந்தத்தைக் கொடுப்பவளும், வேதத்தின் சிரஸ்ஸை மந்தார மாலையைப் போல் அலங்கரிப்பவளும், பகவானுக்கே ஸம்பத்தைக் கொடுப்பவளுமான நாச்சியார் கடாக்ஷம் கிட்டவில்லை. கால ஸந்தி முடிந்து கதவைச் சாத்தி விட்டார்கள். ஸாயங்காலம் ஸேவிக்கலாமென்று இருந்துவிட்டார்கள். மறுநாள் முகூர்த்தம். ஸகல காரியங்களும் ஸரிவர நடந்துகொண்டிருந்தது. வாழைக் கம்பங்கள், மாவிலைத் தோரணங்கள்,

பாக்குக்குலே, தேங்காய்க்குலே முதலியவைகளால் பந்தலே வெகு நேர்த்தியாக ஜோடித்திருந்தார்கள். கோடி ஸூர்ய ப்ரகாசமான காந்த விளக்குக்கள் வீதி முழுவதும் பகல்போல் ப்ரகாசித்தன. உயர்ந்த மேள வாத்ய கோஷங்கள் ஆகாயத்தை யளாவின. மத்தாப்பு பாணங்களின் புகை மூச்சுத் திணரிற்று. மாப்பிள்ளையை எதிர்கொண்டழைக்க மோட்டாரைப் புஷ்பக விமானம்போல் ஜோடித்திருந்தார்கள். திருக்குளத்தைச் சுற்றிலும் மோட்டார் வண்டிகள் இடைவெளியின்றி நின்றிருந்தன. அனைவரும் மங்கள திரவியங்கள், புஷ்ப மாலே, உயர்ந்த ஆடை இவைகளுடன் மணமகனை யழைக்க ஆயத்தமானார்கள். பாவம்! இவர்கள் கொண்டாட்டம் நீடித்திருக்கவில்லே. நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைப்பது ஸாதாரணந்தானே. அச்சமயம் திடீரென்று திருமாமகள் தலேவலி தாங்காமல் மயக்கமாய்ப் படுத்துக்கொண்டாள். அதிக அலேச்சலிருக்குமென்று முதலில் நினைத்தார்கள். ஆனால் எவ்வளவு நாழிகையாயினும் அவளுக்கு நினைவு வரவில்லே. தன்னைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் அடையாளம் தெரியவில்லே. "பயம் பயம்" என்று அடிக்கடி அலறினாள். ஒன்றுக்கொன்று ஸம்பந்தமின்றித் தாறுமாறாய் பேசினாள். கண்கள் பரபரப்புடன் பம்பரம் போல் சுழன்றுகொண்டிருந்தன. சத்திரமே கவலேக் கடலில் மூழ்கியிருந்தது. மணமகள் கண் விழிக்காமல் பாயும் படுக்கையுமாய் நினைவின்றிப் படுத்திருக்கையில் யாருக்கு என்ன தோன்றும்? இதுதான் ஸரியான ஸமயமென்று வானர வீரர்கள் உட்புகுந்து கல்யாண பக்ஷணங்களே களிப்புட னுண்டார்கள். பரத்வாஜ முனி விருந்திலும் ஸ்ரீராம பட்டாபிஷேக மஹோத்ஸவத்திலும் இவ்வளவு தாராளமாய் ஸ்வதந்த்ரத்துடன் உண்டதில்லேயென்று ஒருவருக்கொருவர் தங்கள் பாஷையில் ஸம்பாஷித்துக்கொண்டார்கள். பந்துக்கள் அனைவரிடமும் பரப்பரப்புத் தோன்றியது. பெண்ணின் தாயார், ஸந்நிதிக்குச் சென்று நெய் திருவிளக்கேற்றி ப்ரதக்ஷிணம் செய்ய வாரம்பித்தார். ஜோஸ்ய மாமா ஜாதகத்தை எடுத்துப் பார்த்து, பெரிய ஜோதிஷ புஸ்தகங்களே புரட்டிக்கொண்டு தீர்க்க சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். மணமகளின் சித்தி கருணைக் கடலாகிய ஸ்ரீநிவாஸனுக்கு ஒரு ரூபாயை மஞ்சள் துணியில் முடிந்து வைத்து, "என் அப்பனே! கல்யாணம் நிர்விக்நமாய் நடைபெற வேண்டும். மலேக்கு வந்து நான் உமக்குக் கல்யாண உத்ஸவத்தை நடத்தி வைக்கிறேன்" என்று வேண்டிக் கொண்டார். தான் என்னும் அஹம்பாவம் அப்பொழுதும் அவரை விட்டு அகலவில்லே. இரவு முழுவதும் ஒவ்வொருவரும் அடைந்த கவலேக்கும் வருத்தத்திற்கும் எல்லேயே இல்லே. செய்த வைத்யங்களுக்கு அளவேயில்லே. பெற்றோ ருற்றோர்க ளனைவரும் மணமகளேச் சுற்றி நின்று செய்வதறியாமல் திகைத்து ஏங்கி "இவள் நோய் பூத பிசாச தேவதாவேசத்தினால்தான் உண்டாயிருக்கிறது. ஆகையினால் அவைகளே ஒட்டத் தக்க மாந்த்ரிகர்களேக் கொண்டு ஒட்ட வேண்டும் என்று

ஆலோசித்து, துர்த்தெய்வங்களை வஶ்யம் செய்திருக்கும் கட்டுவிச்சி, மந்த்ரவாதி முதலானவர்களை அழைத்துக்கொண்டு வந்து அத் தேவதையை அகற்ற முயற்சித்தார்கள். அத்தருணம் மணமகளின் உயிர்த்தோழி நிலமகள் இவர்கள் முன் தோன்றி, மிகவும் தீநமாய் "ஐயோ! இவள் பிணிக்கு நீங்கள் செய்யும் பரிகாரங்கள் கொஞ்சமும் ஸரியன்று. மல்லிகைப் பூமாலையை மணமுறச் செய்ய, அதைச் செந்தணலில் காட்டுவது போலிருக்கிறது உங்கள் செய்கை. இப்பெண்ணைப் பேயும் பிரம்மரக்ஷஸ்ஸும் பிடிக்கவில்லை. இவளழகான முகத்தைப் பார்த்தால் விளங்கவில்லையா! கடுகளவும் களை குன்றவில்லையே! நீங்கள் நினைப்பது போல் தமோகுணம் வாய்ந்த துர்த்தேவதாவேசமானல் அத்தெய்வங்களைப்போலவே பார்ப்பதற்கு முகம் பயங்கரமாயிருக்கும். இது ஸத்வமூர்த்தியாகிய பகவானுடைய ஆவேசம்தான். இந்நோய்க்கு மருந்து பகவன் நாம ஸங்கீர்த்தநமும் பாகவத பாத தீர்த்தமும் தான். இவ் வீண் முயற்சிகளைவிட்டு நான் சொன்னபடி செய்து, என்னருமைத் தோழி எழுந்திருக்கும் வழியைத் தேடுங்கள்" என்ருள். அப்பெரிய புலவர்களின் கூட்டத்தில் இச்சிறு பெண்ணின் சொல்லிற்கு யார் செவி கொடுப்பார்கள். திருமகளின் அன்னை அமிர்தவல்லி எதைச் செய்தால் பித்தம் தெளியுமென்று தாய்க்குரிய அளவில்லா அன்பினல் ஒரு கட்டுவிச்சியை யழைத்துக்கொண்டு வந்தாள். அவளும் முறத்தில் அரிசியை வைத்துக்கொண்டு பார்ப்பது போல் பார்த்து 'மது மாம்சங்களைக் கொண்டு இத் தெய்வத்தை பூஜித்தால் இது உடனே அகலும்; இல்லையேல் பயனில்லை' என்ருள். அதைச் செய்யவும் சிலர் உடன்பட்டார்கள். பார்த்தாள் நிலமகள். என்ன உபாயம் செய்து இதை விலக்குவதென்று விளங்கவில்லை. கந்நிகையின் அன்னையை நோக்கி மிகவும் தீனமாய், "அம்மா! இப்படிச் செய்யாதீர்கள். வீணுய்க் கள்ளு மிறைச்சியும் கொண்டுவந்து இவளை அசுத்தப்படுத்த வேண்டாம். இப்படி நீங்கள் செய்தீர்களானல் அவளுடைய உயிருக்கே அபாயம் நேரிடும். தயவு செய்து தேனினுமினிய திருவேங்கடமுடையான் திருநாமத்தைச் செவி குளிர கூறுங்கள். அவளுற்ற நோய்க்கு அதுவே அருமருந்து." என்ருள்.

"இதுகாண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சி சொற்கொண்டுநீர்
அதுவானுஞ் செய்தங்கோர் கள்ளுமிறைச்சியுந் தூவன்மின்
மதுவார் துழாய் முடிமாயப்பிரான் கழல்வாழ்த்தினல்
அதுவே இவளுற்ற நோய்க்கு மருமருந்தாகுமே"

இவள் சொல்லும் வார்த்தைகளைச் சிலர் அங்கீகரிக்கலாமென்று எண்ணினர்கள். ஆனல் அம்ருதவல்லிக்கு அது சரியாகத் தோன்றவில்லை. அவள் நிலமகளைப் பார்த்து "வெகு நேர்த்தியாய் இருக்கிறது உன் வார்த்தை! சிறுசாய் லக்ஷணமாயிராமல் பெரியோர்களின் காரியத்

தில் ஏன் குறுக்கிடுகிறாய்? பெற்று வளர்த்த எங்களுக்குத் தெரியாதவை களை நீ கண்டு விட்டாய். இவளுக்கு வைத்தியம் செய்யும் உரிமை எங்க ளுடையதே தவிர உன்னுடையதன்று” என்று சினங்கொண்ட கால ஸர்ப்பம்போல் சீறினாள். அவள் கோபத்தைக்கண்டு நிலமகள் கொஞ்ச மும் அஞ்சாமல் “அன்னையே! வயதில் சிறியவளானால் ஹிதம் கூறினால் கேட்கக் கூடாதா? இதர தெய்வங்களைப் பூஜிப்பது உசிதமன்று. முன்பு கண்ணன். ‘தன் குல தேவதையைவிட்டு வேறு தெய் வத்தைப் பூஜித்தானேயாகில் இரண்டு தெய்வங்களினின்றும் வீழ்த்தப்படு கிறான். குல தெய்வம் தன்னைத் தவிர்த்து வேறு தெய்வத்தைப் பூஜித்த தினால் கோபங்கொண்டு கை விடுகிறது. இதர தெய்வம் அத்தெய் வத்தை விட்டது போலவேதான் நம்மையும் நாலு நாள் தொழுது இன் னொரு தெய்வத்தை நாடுவான். ஸ்திர புத்தி யற்றவனென்று அவன் ஆராதனத்தை ஒத்துக்கொள்வதில்லை. தான் செய்த பாவத்தின் பலனை அநுபவிக்கிறான். நாமோ கானகத்தில்வஸிப்பவர்கள். அதின் மத்யத்தி லிருக்கும் மலைதான் நமக்குத் தெய்வம். இந்திரன் வஜ்ராயுதத்தினால் வ்ருத்ராஸுரனை ஸம்ஹரிப்பனே யல்லாமல் நம்மை ரக்ஷிக்க ஸாமர்த் தயமுடையவனன்று. அவனால் நமக்கென்ன பயன். நம் குல தெய்வம் நமக்கு ஸகல ஸம்பத்துக்களையும் கொடுத்தருளும்.

त्यक्त्वा निजां यदि देवतां अन्यदेवताः सेवते पूर्वम् ।
क्षितिभृद्देव स देवताद्वयं वन्दतां वन्दतां विभ्रश्यते ॥'

என்று இந்திர பூஜையைத் தடுத்துக் கோவர்த்தன கிரியைப் பூஜிக் கும்படி செய்யவில்லையோ! அப்பொழுதும் சிலர் சிறு பிள்ளையின் பேச்சைக் கேட்பது பிசகென்று தடுத்தார்கள். பல புத்திமான்கள் ஆமோதித்து அப்படியே செய்தார்கள். அதனால் அவர்கள் நன்மையே அடையவில்லையா? அப்படிப்போல் என் வார்த்தையினால் நன்மை யையே அடைவீர்கள். குல தெய்வமாகிய ஸ்ரீநிவாஸனுடைய திருவடித் தாமரைகளைத் தொழுதால் உடனே இவள் தெளிவடைவாள்” என்று கெஞ்சிக் கேட்டாள்.’ ஆனால் இவளருமையான அபிப்ராயத்தை ஒரு வரும் அறியவில்லை. இவள் வார்த்தைகள் செவிடன் காதில் சங்கூதுவது போலாயின. அவர்கள் ராஜஸ தாமஸ தேவதைகளுக்குப் பிரியமான செஞ்சோறும் கருஞ்சோறும் செய்து நாற்சந்தியில் அவ்வஞ்சனைக் குறத்தியின் சொற்படி கொண்டுபோய் வைத்தார்கள். அப்பொழுது திருமாமகளுக்கு நோயதிகமாயிற்று. ஜ்வரத்தின் வேகம் தாங்காமல் பிதற்றினாள். தோழிக்கு வருத்தம் மேலிட்டது “ஐயோ! என் வார்த்தை உங்களுக்குப் பத்தியமில்லையே! நீங்கள் இப்படி துர்தெய்வங்களை ஆரா தித்து ஆடுவதினால் இவ்விளமங்கையின் நோய் அதிகமாகிறதே. இவள் கரு நெய்தல் புஷ்பம்போன்ற கண்களும், கோவைக்கனியை நிகர்க்கும் செவ்வாயும் அநியாயமாய் அழகையும் சோபையையும் இழந்துவிட்

டனவே. இதைக் கண்டுமுங்கள் மனம் தெளிய வில்லையே! இனியாகிலும் குவலயா பீடமென்னும் யானையின் செருக்கை முடித்த கண்ணபிரான் திருநாமத்தைக்கூறிப் பரிசுத்தமான ஸ்ரீ பாதரேணுவைக்கொண்டு வந்து நெற்றியிலிடுங்கள். அசுத்தமான சாம்பலை அழியுங்கள்.

"மருந்தாடுமென்றங்கோர் மாயவலவை சொற்கொண்டு நீர்
கருஞ்சோறு மற்றைச் செஞ்சோறுங் களனிழைத் தென்பயன்
ஒருங்காகவே வுலகேழும் விழுங்கி யுமிழ்ந்திட்ட
பெருந்தேவன் பேர்சொல்ல கிற்கிலவனைப் பெறுதிரே!
இவனைப் பெரும் பரிசிவ்வணங்காடுதலன்றந்தோ
குவளைத்தடங் கண்ணுங்கோவைச் செவ்வாயும் பயந்தனள்
கவளக் கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால்
தவளப் பொடிக்கொண்டு நீரூட்டிடுமின் தணியுமே."

இவள் எவ்வளவு எடுத்துக் கூறினும் அவர்கள் கேட்கும் வழியாயில்லை. அவர்கள் செய்வதையே செய்தார்கள். ஏதோ ரக்ஷைகளைக் கொண்டு வந்து கட்டினார்கள். ஆடு பலியும் கள்ளும் கொடுப்பதாக வேண்டிக் கொண்டார்கள். பூசாரி எவ்விதம் சொல்லுகிறானோ அவ்விதமெல்லாம் செய்தார்கள். அதைப் பார்த்து நிலமகளுக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது. இவர்கள் அஞ்ஞானம் நீங்கவில்லையே என்று பரிதபித்தாள். "அன்னைமார்களே! நீங்கள் செய்வது சிரிப்பிற்கிடமே யொழிய வேறில்லை. வாசலில் உலர்த்தின நெல்லைக் கழுதையைத் தின்னவிட்டு அதன் உதடு எவ்வளவழகாய் அசைகிறதென்று ஆனந்திப்பாரைப் போல் இருக்கிறது. தான்யம் வீணாய்ப்போவது உங்கள் கண்ணில் விழவில்லை. இவ்விதம் சில நிமிஷங்கள் வேடிக்கை பார்த்தீர்களானால் இத்தெய்வ நங்கையைக் காணமாட்டீர்கள். எந்த நோய்க்கு எது மருந்தென்று அறிந்து செய்யாமல் இவ்விதம் செய்தீர்களே! வயிற்று வலி என்றால் தலையில் ஈரத்துணி போடுவதைப்போல் இருக்கிறது உங்கள் செய்கை. பால் பருகும் பருவத்திலிருந்து இம்மங்கை கோவிந்தனைத் தவிர மற்றைத் தெய்வங்களைக் கனவிலும் நினைத்தவளன்றே! நீங்கள் செய்யும் சிகித்ஸையினால் இவளுயிர் இன்னும் போகாமலிருப்பது ஆச்சரியம். முன் ஸீதாதேவி துராத்மாவான ராவணனுடைய உளறல்களையும் க்ரூர ராக்ஷஸர்களின் அதட்டல்களையும் மிகவும் பொறுமையுடன் ஏற்றதனாலன்றோ அனுமானால் உரைக்கப்பட்ட ஸ்ரீராம நாமாம்ருதத்தைப் பருகினாள். அப்படியே இவளும் இக்கூட்டத்தில் யாராவது ஒருவர் க்ருஷ்ண நாமாம்ருதத்தை உரைக்கமாட்டாரோ? அதைப் பருகி நாம் பிழைப்போமா வென்று ஏங்கி இருக்கிறாள். ஸ்நேஹிதர்களுக்கு வைத்யன் ஸ்ரீய: பதியே யன்றோ? ஸத்வகுண மூர்த்தியாகிய ஸர்வேஸ்வரனைப் பஜியுங்கள். நமக்கு நேரிட்டிருக்கும் பயம் உடனே விலகும்.

“ஸகலேஹ யஸ்ய நியத தவ சேதநாசேதநம்
ப⁴ஜதி நமஸ்யதி ஸ்மரதி வக்தி வீக்ஷதி வா |
குணம் கமபி வேத்தி வா தவ குணேஷு மோஹாயித:
கதா³சந கத²ஞ்சந க்வசந தஸ்ய ந ஸ்யாதி³ஹ ப⁴யம் ||”

[ஸத்வ ரஜோ தமோ குணங்களாகிற முக்குணங்களையும் அடக்கியாளும் ப்ரபுவே! இதர தெய்வங்கள், எங்குக் குற்றம் காணும் வழி என்று அதையே தேடி அலையும். நீயோ ஆயிரக் கணக்கான குற்றங்களை மறந்து அல்ப குணத்தையே அங்கீகரிப்பவன். உன் ஸங்கல்பத்திற்கு அதீநமாயிருக்கின்றன ஸமஸ்த சேதநா சேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் (ஸ்வரூபம் - ஒரு வஸ்துவையும் பிரியாது இருக்கிற தன்மை; கற்கண்டில் சுவை இருப்பது போலவே. ஸ்திதி - அவ்வஸ்துவின் இருப்பு. ப்ரவ்ருத்தி - அவைகளின் வேலை) ஆகையினால் ஸகல பயங்களினின்றும் காப்பாற்றக்கூடிய ஶரணாகத வத்ஸலனாகிய உன்னை அடைக்கலம் அடைந்த அந்தணர் அந்தியர் எவராகிலும், நாவினால் உன் கல்யாண குணங்களைத் துதிப்பது, சரீரத்தினால் உன் திவ்ய மங்கள விக்ரஹத்தை வணங்குவது, உன் மஹிமைகளை மனத்தினால் சிந்திப்பது, ஸர்வ பாபங்களையும் பஸ்மமாக்கவல்ல உன் திவ்ய திருநாமங்களைப் பாடுவது, உன் கோயில் ப்ராகாரங்களை ப்ரதக்ஷிணம் செய்வது, கணக்கற்ற உன் கல்யாண குணங்களில் ஏதேனு மொன்றை அறிவது ஆகிய இவைகளைச் செய்கிறார்களோ, அவர்களுக்கு எக்காலத்திலும் எத்தேசத்திலும் எத்தெய்வத்தாலும் எவ்விதமான பயமும் உண்டாகாது] என்றுள்ள ஸ்ரீதேசிகமணியின் ஸ்ரீஸூக்தியை நம்புங்கள். நீங்கள் கட்டும் ரக்ஷைகள் அணுவளவும் பயன்படா. அல்ப தெய்வங்களின் மந்த்ரம் பெருந்தெய்வத்தினின்றும் காக்குமா? எவனோ ஒரு கீழ்மகன் ‘இவ்விதம் செய், அவ்விதம் செய்’ என்று கட்டளையிடுகிறான். ஒரு காசுக்கு முதவாத அவன் பேச்சை நம்பி நீங்கள் இப்படி ஆடுவது அழகன்று. ‘வைத்யன் யார்? என்ன மருந்து கொடுக்கவேண்டும்’ என்று சிந்திக்கவேயில்லை. நச்ச மாமருந்து தயாநிதி ஸ்ரீநிவாஸன் ஒருவன்தான். இவள் பிழைக்கவேண்டுமானால் உலகத்திற்கே வைத்ய நிபுணனாகிய ஆயர் குலத்தி லுதித்த ஸ்ரீக்ருஷ்ணனை நினைத்துப் புகழ்ந்து போற்றுங்கள். உடனே அவள் எழுந்திருப்பள்; ஐயமில்லை. வேதம் தெரிந்த பெரியோர்களைக் கொண்டு இவள் பிணியை ஒழிக்க வழி தேடுங்கள். இதுதான் உத்தம சிகித்ஸை” என்றாள்.

“அணங்குக் கருமருந்தென்றறு அங்கோராடும் கள்ளும்பாராய்
சுணங்கை யெறிந்துநுந்தோள் குலைக்குப்படு மன்னைமீர்
உணங்கல் கெடக் கழுதையு தடாட்டங் கண்டென்பயன்
வணங்கீர்கள் மாயப்பிரான்றமர் வேதம் வல்லாரையே.

உன்னித்து மற்றொரு தெய்வந்தொழா ளவனையல்லால்
நும்மிச்சைசொல்லி நுந்தோள் குலைக்கப் படுமன்னைமீர்
மன்னப்படு மறைவாணனை வண்டுவராவதி
மன்னனை ஏத்துமின் ஏத்துதலுந் தொழுதாடுமே.''

இத்தருணம் எம்பெருமானால் ஏவப்பட்ட முனிவரொருவர் விரைவுடன் தாயார் ஸந்நிதியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர் இவர்களிருக்கும் சத்திரத்தின் வாசலை யடைந்ததும் அப்பெண், கொஞ்சம் கண் விழித்துப் பார்த்தாள். அதைக்கண்டு சில புத்திமான்கள், இச்சிறு பெண் ஒரே பிடிவாதமாய்ச் சொல்லுவதால் உண்மையாகவேயிருக்கலாம். ஆகையினாலேயே இவள் கண்ணைத் திறக்கிறா ளென்று வேதம்வல்ல அப்பெரியவரைக் கந்நிகையின் அருகில் அழைத்துக்கொண்டு போய் எவ்விதமாயாகிலும் இக்குழந்தையின் நோயைக் குணப்படுத்த வேண்டுமென்று வேண்டினார்கள். அப்பொழுது நிலமகள் அடைந்த ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை. தோழியின் நோய் குணமாகும் மார்க்கம் இதுவே. இம்மஹான் அவஶ்யம் போக்கடிப்பார் என்று எண்ணினாள். ஆனால் ஸர்வேஶ்வரனுக்கும் மேல்பட்ட ஸாமர்த்யசாலிக ளென்று நினைக்கும் சிலர், 'உன்மத்த ஜடனைப்போல் விளங்கும் இம்முனிவரால் என்ன செய்ய ஸாத்யம்?' என்று சொல்லி ஏளனச் சிரிப்பும் சிரித்தார்கள். மஹாபுருஷர்களின் தபோபலமும் யோக ஸித்தியும் தேவதாநுக்ரஹமும் இக்காலத்திய மேதாவிகளுக்கு நம்பிக்கையை விளைவிப்பதில்லையன்றோ! ஆனது பற்றியே அவர்கள் ஆழ்வா ராசாரியர்களின் பெருமைகளை நன்றாய் அறிந்துகொள்வதில்லை. அன்றியும் தங்களுடைய குயுக்திகளையும் குதர்க்கங்களையும் அவர்களிடம் உபயோகித்துத் தூஷணையி லிறங்கித் தாங்களும் அநியாயமாய் நாசத்திற்கு ஆளாகிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? தங்கள் கர்ம வசத்தால் அப்படி ஆடுகிறார்கள். முன் ஸர்வலோக சரண்யன் ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்து விஶ்வரூபம் காட்டின ஸமயம் துர்ப்புத்தியுடைய் துர்யோதனன் இந்த்ரஜால மென்றும் மாயையென்றும் வஞ்சனை யென்றும் இகழ்ந்து பேசவில்லையோ! இடக்கை வலக்கை யறியாத இடைப்பெண்கள் அவனைப் பகவானென் றறிந்து ஏத்திப் புகழ வில்லையோ! அவரவர்களின் ஜந்மாந்தர ஸுக்ருத துஷ்க்ருதங்களை யாரே யறிவார்? அம்முனிவர் மணமகளின் ஸமீபம் வந்ததும் அவரைக் கண்டு கொஞ்சம் புன்சிரிப்புக் கொண்டாள் கந்நிகை. அக்கிருபா மூர்த்தி அவள் அருகில் அமர்ந்து மிகவும் பக்தியுடன் ஏதோ ஒரு மந்த்ரத்தை ஜபித்தார்.

என்ன ஆச்சர்யம்! அம்முனிவரின் பெருமைதானென்ன? எம்பெருமானாரேயோ என்று தோன்றியது. முன்பு அரசன் மகளைப் பிடித்தப்ரம்ம ரக்ஷஸ்ஸை யாதவப் பிரகாசனால் ஓட்ட முடியாத ஸமயம் அப் பூதம் நம் ராமானுச முனிவரைக் காண்பித்து

"கமலநற் கண்ணும் கோலங் கொண்டதோர் அகலமார்பும்
விமலமா முழந்தாள் தாமும் வீறுடைத் தோறுமாகி
அமலமாய் வழிக்கு நோக்கா லிபியரை யருளவந்த
அமரர்கள் தலைவனே சொன்னல் அகலுவேன் புகலுவேனே"

என்று கூறியதைப் போல் திருமாமகளைப் பீடித்த நோயோ பேயோ உடனே நான் இனி இங்கு நின்றால் அநர்த்தம்தான் விளையுமென்று ஸிம்ஹத்தினிடம் பயந்த மான்களைப் போல் பறந்தோடி விட்டது. பெண் மணி தூங்கி எழுந்தவள்போல் ஸுகமாய் எழுந்திருந்து உட்கார்ந்தாள். அம் மஹான் ஸ்ரீநிவாஸனுடைய ஸ்ரீபாதரேணுவைப் பெண்ணின் நெற்றியில் அணிவித்து உள்ளுக்கும் கொஞ்சம் கொடுத்தார். அவர் மிகவும் ஆர்த்த த்வனியுடன், 'ஆபத்பாந்தவா! விண்ணோர் தலைவா! கேசவா! இவர்களுடைய பயத்தை உன்னுடைய திவ்ய நாமங்கள் தான் போக்கவேண்டும். உன்னடியார்களைக் காக்குமுரிமை உன்னைச்சேர்ந்த தல்லவோ! ஏன் இவ்வளவு உதாஸீநம்?' என்று கூவினர். இக்குரல் செவிக் கெட்டின வளவில் எம்பெருமான் மனம் தத்தளித்தது. பூர்வம் பெரிய அரசர்களின் ஸபையில் பரிபவப்படுத்தப்பட்ட பாஞ்சாலி 'கோவிந்தா' வென்று அழைத்த சொல்லைக் கேட்டதும் எவ்விதம் மனம் பதைத்து அளவில்லா ஆடைகளை அருளுட னளித்தாரோ, அவ்விதமே தன் பக்தனின் ப்ரார்த்தனைக் கிரங்கி அவர்களுடைய கவலைகளையும் துக்கங்களையும் சூரியனைக் கண்ட பனிபோல் பறக்கடித்தார். அங்குக் கூடியிருந்த அனைவரும் அத்யாஸ்சர்ய மடைந்தார்கள். அமிர்தவல்லி நிலமகளின் புத்திக்கு மிகவும் மெச்சினுள். என்னே எம்பெருமானுடைய கருணை! பயத்தை உண்டுபண்ணுபவரும், அதைஉடனே போக்கடிப்பவரும் அவ் வச்சுதனேயன்றோ?

மறுநாள் அதே முகூர்த்தத்தில் ஸ்ரீநிகேதநனுக்கும் திருமாமகளுக்கும் விவாஹம் வெகு விமர்சையாய் நடைபெற்றது. தாதா, மாமா, சித்தி முதலானவர்கள் 'நான் செய்தேன், என் ஸாமர்த்யத்தினுல் தான் நடந்தது' என்று சொல்வதை அடியோடு விட்டு, 'ஸர்வம் பகவத் ஸங்கல்பம்' என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் அபரிமிதமான ஆனந்தத்துடன் அப் பெரியவரை யேத்திப் புகழ்ந்தார்கள். அக் கந்நிகையைப் பிடித்த பேயை ஒட்டின மஹா மந்த்ரத்தின் மஹிமையைப் பரக்கக் கூறப் பிரார்த்திக்கிறோமென்று ஆவலுடன் வினவினர்கள்.

அதைக்கேட்டு அம்முனிவர் புன்னகை பூத்த திருமுகம் விளங்கப் பின்வருமாறு கூறத் தொடங்கினர். "அம்மஹாமந்த்ர மஹிமையை என்னவென்றுத் உரைப்பேன். அதை எவ்விதம் கொண்டாடுவேன். என்னுடைய சக்தியினுலும் புத்தியினுலும் ஒன்றும் செய்யவில்லை. ஸகலமும் மந்த்ரத்தின் மஹிமைதான். மாசற்ற இம்மந்த்ரத்தை அஷ்டாக்ஷர

மென்றும், மூலமந்த்ர மென்றும், திருமந்த்ர மென்றும் சொல்லுவார்கள். இதைக் குறித்து நமது ஆசார்யவள்ளல்

"மந்த்ராணாம் பரமோ மந்த்ரம் குஹ்யாநாம் குஹ்யமுத்தமம் |
பவித்ராணாம் ச பவித்ரம் மூலமந்த்ர: ஸநாதந: ||"

[ஸகல மந்த்ரங்களுக்குள்ளும் அநாதியான மூல மந்த்ரமானது உத்தமமான மந்த்ரம். ரஹஸ்யங்களுக்குள் உயர்ந்த ரஹஸ்யம். பரிசுத்தம் செய்யக்கூடியவைகளுள் பரிசுத்தமானது.]

"யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர: |
ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர: ||"

[எவ்விதம் ஸகல தேவதைகளுள் ஸ்ரீமந் நாராயணனைக் காட்டிலும் மேன்மையான வேறு பரதேவதை இல்லையோ, அவ்விதமே ஸமஸ்த மந்த்ரங்களுள் திருமந்த்ரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்திரம் கிடையாது.] பகவத் பக்தர்கள் அஷ்டாக்ஷர மந்த்ரத்தின் மஹிமையை அறிந்தவர்கள். அவர்கள் உட்காரும்பொழுதும், பலஹீனமாய்ப் படுத்திருக்கும் தருணத்திலும், எந்த இடத்தில் வசித்தாலும் இம்மஹா மந்திரத்தையே காரணமாக ஜபிப்பார்கள்.

"வ்யாபக மந்த்ரங்கள் எல்லாவற்றிலும் அதிகமாய், ஸர்வ வேத ஸாரமாய், ஸர்வாநிஷ்ட நிவர்த்தந க்ஷமமாய், ஸர்வ புருஷார்த்தங்களுக்கும் ஸாதகமாய், ஸர்வோபாயங்களுக்கு முபகாரகமாய், ஸர்வ வர்ணங்களுக்கும் தம்தாம் அதிகாராநுகுணமாக வைதிக ரூபத்தாலும் தாந்த்ரிக ரூபத்தாலும் உபஜீவ்யமாய், வ்யாப்ய வ்யாபக ஸர்வதத்வ கண்டோக்திமத்தாய், ஸர்வ மந்த்ர நைரபேக்ஷ்யகரமாய், ஸர்வ பகவந் மூர்த்திகளுக்கும் ஸாதாரணமாயிருக்கையாலே ஸர்வாசார்யர்களும் இத்தையே விரும்பிப் போருவர்கள்" என்று ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் விஸ்தாரமான இம்மந்த்ரத்தின் மஹிமையை உரைத்தார். இம்மந்த்ரத்திற்குள்ள பெருமை பகவந் மந்திரங்களாகிய வைஷ்ணவ, வாஸுதேவ, ஸுதர்சந, நாரஸிம்ஹ முதலான மந்த்ரங்களுக்கே யில்லையென்றால் அற்பமாகிய துர்க்கா ஜபம் நவக்ரஹ ஜபம் முதலியவற்றைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ! இம்மந்த்ரத்தின் வன்மையும் தன்மையும் அபரிமிதமானது. பரமாசார்யர்களுள் ஆழ்வார்களும் இம்மஹாமந்த்ரத்தை அனைவரும் கற்கவேண்டி "நாடுநகரமும் நன்கறிய நமோ நாராயணாய", "நல்வழியால் நமோ நாராயணா," "நின்திருவெட்டெழுத்துக் கற்றும்" என்று பலவாறாகப் பாசுரங்களைப் பாடி, நாராயணநாம மஹிமையை எடுத்துரைத்தார்கள். இந்நாமத்தின் மஹிமையைத் திருமங்கை மன்னனும்.

‘குலந்தரும் செல்வம்தந்திடு மடியார்படுதுய ராயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்றதாயினு மாயினசெய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் [நாமம்’’

என்னும் பாசுரத்தால் பரக்கக் கூறியிருக்கிறாரன்றோ? ஸகல ஐச்வர்யத்துடன் அரசனாயிருந்த குலசேகரப்பிரானும் தாம் இயற்றிய முகுந்தமாலை என்னும் கிரந்தத்தில் பரமஹிதமான மூலமந்த்ரத்தின் பெருமையைப் பின்வருமாறு கூறுகிறார்:

‘ஹே மர்த்யா: பரமம் ஹிதம் ச்ருணுத வோ வக்ஷ்யாமி ஸங்க்ஷேபத:
ஸம்ஸாரார்ணவமாபதூர்மிபஹுலம் ஸம்யக் ப்ரவிச்ய ஸ்திதா: |
நாநாஜ்ஞாநமபாஸ்ய சேதஸி நமோ நாராயணாயேத்யமும்
மந்த்ரம் ஸப்ரணவம் ப்ரணாமஸஹிதம் ப்ராவர்த்தயத்வம் முஹு: ||’

[அதாவது ஆபத்துக்களாகிற அலைகளால் நிறைந்திருக்கிறது இந்த ஸம்ஸார ஸாகரம். கரை காணாத அக்கடலில் மூழ்கிக் கிடக்கின்ற மனிதர்களே! உங்களுக்குப் பரமஹிதத்தைச் சுருக்கமாகச் சொல்கின்றேன் கேளுங்கள்: உலகத்தில் அநேகர் வெவ்வேறு விதமாகப் புருஷார்த்தங்களை யடைவதற்கு உபாயமான தெய்வங்களைக் கூறுகின்றனர். இவைகளுக்குள் எது உண்மையோ வென்று திகைக்காமல் அஜ்ஞாநத்தை விட்டு ப்ரணவத்துடன்கூடிய நமோநாராயணாய வென்னும் உத்க்ருஷ்டமான இம்மந்த்ரத்தை இடைவிடாமல் மனத்தில் த்யாநம் செய்யுங்கள். அதுவே உங்களுடைய ஸகல கஷ்டங்களைப் போக்கடிக்கும்.]

ஸ்ரீ தேசிகனும் இம்மந்த்ரத்தின் மஹிமையை எடுத்துரைக்கும் தருணத்தில்,

“ரோகாத்யுபத்ரவேப்யோ முச்யந்தே நாத்ர ஸம்சய: |
சுகவந் நாராயணேத்யேதஜ்ஜபந்தோப்யபோதிந: ||’’

[நாராயண மந்த்ரத்தை அர்த்தம் தெரியாமல் கிளிப்பிள்ளையைப் போல் சொன்னாலும் அவர்கள் நோய், ஆபத்து, பயம், துக்கம் இவைகளிலிருந்து நிச்சயமாய் நிஸ்ஸந்தேகமாய் அக்ஷணமே விடுபடுகிறார்கள்] என்றும்

“யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே |
ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா: ||’

[எந்தத் தேசத்தில் அஷ்டாக்ஷர மந்த்ர ஸித்தி யடைந்த மஹாத்மா வானவர் பூஜிக்கப்படுகிறாரோ அவ்விடத்தில் ஒருபொழுதும் பிணி, பஞ்சம் திருட்டு முதலியவைகள் தலைகாட்ட மாட்டா] என்றும்

"யதஜ்ஞஸ்ஸர்வேஷ்வஷ்டாக்ஷரம் வேதவேதிகம் |
தத்வே வ்யாபகஸர்வஸ்வாய ஸர்வாய ஸத்தே நம: ||"

[வேதமும் ஸ்ம்ருதிகளும் இம்மந்த்ரத்தி லடங்கியிருக்கின்றன. வேதத்தில் தத்வம், உபாயம், புருஷார்த்தம் முதலானவைகளும் அவற்றையடையும் மார்க்கமும் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வஷ்டாக்ஷர ஜபம் ஒன்றினாலேயே அவைகள் அனைத்தையும் அடையலாம். அன்றியும் நாராயண, வாஸுதேவ, விஷ்ணு என்ற இம்மூன்று மந்திரங்களும் பெருமையுடைய வ்யாபக மந்த்ரங்களாயினும், அவற்றில் முதன்மை பெற்றது நாராயண மந்த்ரம்தான். அப்படிப்பட்ட மஹிமைவாய்ந்த மஹா மந்த்ரத்தை நமஸ்கரிக்கிறேன்] என்றும் அநேகவிதமாய்ப் புகழ்ந்து போற்றியிருக்கிறார். ஐந்து வயது பாலனாகிய துருவனுக்கு எல்லையற்ற ஸகல ஐச்வர்யங்களையும் கொடுத்துக் காப்பாற்றியது இம்மஹாமந்த்ரமே. பக்தனான ப்ரஹ்லாதாழ்வானை எண்ணிக்கையற்ற ஆபத்துக்களினின்று காப்பாற்றியதும் இம்மாணிக்கமே. இதனர்த்தத்தை முழுவது மறிய வேண்டுமானால் ஆசார்யர்கள் மூலமாய் அன்புடன் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். அஷ்டாக்ஷர ஜபத்தை ஸ்த்ரீகளும் ஆசார்யோபதேசம் பெற்று அவசியம் செய்யவேண்டும். கரும்பின் வேரையும் தோகையையும் கழித்தாலும் சுவை குன்றாது அதிகமாயிருப்பதுபோல், ப்ரணவம் தவிர்த்து ஜபித்தாலும் அதின் மஹிமை குறையாது. புண்டரீகனுக்கு நாரத பகவான் உபதேசித்ததும், திருமங்கையாழ்வாருக்கு ஸர்வேஸ்வரன் உபதேசித்ததும் இம்மஹா மந்த்ரம்தான்.

இப்பெண் மிகவும் தெய்வபக்தி வாய்ந்தவள். இவளுக்குற்ற நோய், பேயோ பூதமோவென்று நீங்கள் ப்ரமிக்கும்படி செய்ததும், இம்மந்த்ரத்தின் மஹிமையால் அது விலகியதும், அத்திருமந்த்ரத்தின் மஹிமையை நீங்கள் அறியவேண்டியே எம்பெருமானால் விளையாடப்பட்ட ஆச்சர்ய லீலை என்று தோன்றுகிறது. உங்களை, மற்ற தெய்வங்களை, பூஜிக்கும்படியாகவிட்டு அதனால் பயனில்லை யென்று நிரூபிப்பதன் பொருட்டே இவ்விதம் உங்களுக்கு பயத்தை யுண்டாக்கி அதைப் போக்கடித்தார். ஒருஸமயம் பேய் பூதங்க ளிருந்தாலும் இம்மஹாமந்த்ரத்தின்முன் அவைகள் ஒரு க்ஷணமும் நிற்கமாட்டா. எவரிடம் நாராயணனென்னும் மங்களகரமான திருநாம மிருக்கிறதோ அவரைப் பகவான் பின்தொடர்ந்து சென்று அவனுக்குநேரும் ஆபத்துக்களை அருகில் அணுகவொட்டாமல் காப்பார். இம்மந்த்ரத்தின் மஹிமையைச் சொல்லப் புகில் கால தத்வமுள்ளளவும் ஆதிசேஷனாலு முரைப்பதரிது. அப்படி யிருக்க நம்போன்றவர்களைப்பற்றி என் சொல்வது!

"கூதபூதவிஷண்ணாஸ்ஸ்ரியாஸ்ஸு லீதா: வொரேஷு ச வ்யாயிஷு
வதபூதாநா: |

𑌸𑌂𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌶𑌬𑍍𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌦𑍁𑌃𑌖𑌾𑌃 𑌸𑍁𑌖𑌿𑌨𑍋
𑌭𑌵𑌨𑍍𑌤𑍁 ॥"

[இவ்வுலகில் ஸந்தாந ஸம்பத்துக்க ளில்லையென்று வருந்துபவர்கள், ஸ்வர்கலோக பலம் கிடைக்காமல் வ்யஸநிப்பவர்கள், ஓரிடத்திலும் நிலையில்லாத புத்தியுடைய பித்தர்கள், பூத பிசாசங்களைக்கண்டு பயந்தவர்கள், மஹத்தான வ்யாதிகளால் பீடித்திருப்பவர்கள், இவர்கள் அனைவரும் அர்த்தம் தெரியாமல் "நாராயண" வென்னும் திருநாமத்தை பரிபூர்ண விச்வாஸத்துடன் உச்சரித்தார்களேயானால், அவர்கள் துக்கம் நீங்கி அவரவர்கள் வேண்டும் பயனையடைந்து ஸுகப்படுகிறார்கள்.] நாராயணவென்னும் திருநாம மஹிமை ஒன்றே போதுமே ஒருவன் உய்வதற்கு, அதன் பெருமையை மனத்தினால் நினைக்கவும், வாயினால் கூறவும் தான் ஸாத்யமோ? அப்படிப்பட்ட மந்த்ரமஹிமையினால், திவ்யதம் பதிகளைப்போல் இணைபிரியா தம்பதிகளும் நீடூழி வாழ்வீர்களாக" என்று அவ்வதூவரர்களை ஆசீர்வதித்துச் சென்றார் முனிவர்.

இவ்வந்தணருடைய நன்மொழிகளைக் கேட்டு அனைவரும் ஆனந்தக்கடலில் மூழ்கி, தயாநிதியாகிய ஸ்ரீநிவாஸனே இவ்வடிவுடன் எழுந்தருளி இப்பேராபத்தினின்றும் காப்பாற்றினதாக நினைத்து, அவ்வண்ணலை அன்புடன் மனமாரத் துதித்தார்கள். வயதில் சிறியவளாகிலும் மதியில் பெரியவளென்று நிலமகளைப் புகழ்ந்து, அவளுடைய உபதேசப்படி இதர தேவதைகளைப் பூஜிப்பதை அன்று முதல் அறவே மறந்து, பரமபக்தியுடன் திருமந்த்ரஜபம் செய்யத் தொடங்கினர்.

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சார க்ரமம்

ஜூன் 2உ காலை :	நீடாமங்கலம்.
,, 5உ	கோவில்வெண்ணி.
,, 6உ	கம்மேனத்தம்.
,, 7-8உ	வடுவூர்.
,, 9உ	மன்னார்குடி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ வண் ஶடகோப ஸ்ரீ ரங்க ஶடமய ந ஷட்கம் ||*

ஸ்வஸ்த்யஸ்மத்தேஶிகஶ்ரீஶ்ருதிநிகரபயஸ்ஸாரநாராயணஶ்ரீ:
ஸ்வாதந்த்ர்யம் ஸர்வதந்த்ரேஷ்வபி ச யதிதாம் ஶ்ரீபரிவ்ராஜகேந்த்ர: |
வேதாந்தத்வந்த்வஸித்தாந்திஸுபதிமதநிர்தாரணே ஸார்வபௌம:
ஸ்ரீமத்ரங்ககாயார்த்தஜயதி யதிவரஶ்ஶம்போ ஜேஜயீதி || 1.

தத்தாத்ருங்நருஸிம்ஹாதிஶடமயநயபராஜ்யா யதீந்த்ர:
ப்ரேம்ணா பட்டாபிஷிக்த: கவிநஶஶரதி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியோ ய: |
ஸோऽயம் ஸ்ரீரங்ககாயார்த்தஜ முநிவரயதிநாऽஹோபிலாஸாம்ராஜ்யம்
பக்தாநாம் பாக்யஸந்தோ ஸந்ததவ்ருஷபஸமாலம்பிதோ ஜேஜயீதாம் || 2.

ஸ்ரீமத்ராமாநுஜீயப்ரமாணமதமஹாராஜ்யபட்டாபிஷிக்தே
ஸ்ரீஶ்ரீரங்காதிகாயார்த்தஜயதியதிநாயகே ஜாமதக்நே |
ஸத்பக்த்யா யதிராஜப்ரவரமதபுநாநந்தநே சக்ஷுஷி:
கிம் வா ஸ்ரீவைஷ்ணவாநாம் கவிரபி ஹ்ருதயே த்ருஷ்ணயாஸ்த்யஸ்மி

ஸ்வஸ்திஸ்ருத்யா மரீயா நயநிதமபுராயநவிஹாரோ ஸோऽவபாஹ்யா
வாக்யாதி ஸ்வயம்பூநீவாவிதிதவிஹதிரங்ஜம்ஹமாணா ஸஹாஸம் |
ஸஜ்ஜமாவாரஶீதிநுதஜநஶாஸ்த்ரஜ்ஞவிஜ்ஞாநப்ரவீணா
யஸ்யாஸ்மத்தேஶிகேந்த்ரம் ஶதமிஹ ஶரதஸ்ஸம் ப்ரபஶ்யேம பக்த்யா || 4.

ஸ்ரீராமாநுஜஸந்ததாபநவியாபாவிஹ்ருதாமோதரம்
ஸ்ரீமல்லக்ஷ்மீந்ருஸிம்ஹாங்கஸம்ஶ்ரிதபதஸாம் ஸௌவாசவாஸ்வாதிநாம் |
ஸ்ரீரங்காதிஶடஜிதாம் பட்டாபியாமோஸ்யக்ஷ்மாரத்நாநாம் ஸதாம்
வாசாம்ஹோஜயந்தே ஸமேத்ய ஜயம் பக்த்யா நமஸ்யாமதி: || 5.

லக்ஷ்மணார்யஸ்ய தேஶநாவநே ஜாக்ரதம் மநோமௌலிதம் ஶாந்தமேஹ:
ந்ருஸிம்ஹஸாம்ராஜ்யஸிம்ஹாஸநம் ரங்கநாதம் யோகிநம் ஶ்ரயே || 6.

---

* இந்த ஷட்கத்தின் கர்த்தா யாரென்று தெரியவில்லை, அநாமதேயமாய் தபால் மார்க்கமாகக் கிடைத்தது. — ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வாந். ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

(1)

ஸ்ரீ அழகியசிங்கருடைய சோளதேசக திருப்பதிகளின் மங்களாசாஸந க்ரமம்

திருமங்கை யாழ்வார், "குவளைநீள் முளரி குமுதமொண் கழுநீர், கொய்மலர் நெய்தலொண் கழனி" என்றும் "குலைமலி கதளி குழுவும் வார் கமுகும் குரவுநற் பலவும், குளிர்ந்தரு சூத மாதவியும் செழுமையார் பொழில்கள் தழுவு" மென்றும் அருளிச் செய்கிறபடியே, அழகியதான கழனிகளையும் பொழில்களையுமுடைய சோள தேசத்து பூமிகளில், "சொல்லார் சுருதி முறையோதி சோமுச் செய்யும், தொழிலி னோர் நல்லார் மறையோர் பலர்வாழும்" என்கிறபடியே ஞானம் அனுஷ்டானம் முதலிய கல்யாண குணங்களுக் கிருப்பிடங்களான வானுடுகந்த வைஷ்ணவர்களு டைய வாஸஸ்தானங்களாயு மிருக்கையாலே, முத்திதரும் நகரங்களான அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி முதலிய புண்ய க்ஷேத்திரங்களோடு துல்யங்களான அக்ரஹாரங்களில் நித்யவாஸ ரஸிகனாய்ப் பற்பல வவதார ரூபங்களோடு அங்காங்கு கோயில் கொண்டு நித்யஸூரிகளுடைய வவதாரங்களான திவ்ய ஸூரிகளாலும், எம்பெருமானார் ஸ்ரீ நிகமாந்த மகா தேசிகன், ஸ்ரீ மதாதிவண் சடகோப யதீந்திர மகா தேசிகன் முதலிய பூர்வாசார்யர்களாலும் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட திவ்ய ரூபங்களாய் பர வ்யூஹ ரூபங்கள்போல, தேச தௌர்லப்ய தோஷமில்லாது ராமக்ருஷ்ணாதி விபவ ரூபங்கள்போல, காலதௌர்லப்ய தோஷமில்லாது "முனைகத சீற்றம் விண்சுடப் போய் மூவுலகும் பிறவுமனைத்து" மஞ்சவாளரியாயிருந்த நரசிங்க ரூபம்போல, வஸ்து தௌர்லப்ய ரூப தோஷமில்லாது ஸர்வ விதங்களான ஸௌலப்ய குணங்களோடும் 'ஸர்வாதிஶாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மூர்த்திபிம்பயோ:' என்கிறபடியே மற்றை யவதாரங்களைக் காட்டிலும் அதிகங்களான கல்யாண குணங்களையுமுடையதாய் ஸர்வாபராத ஸஹிஷ்ணுவாய், கொள்ளமாளா வின்பவெள்ளம் கோதிலத நிற்கும் வள்ளல் கதனத்தோடு ஸ்திரப்ரதிஷ்டித ரூபங்களாய் விளங்கும் அர்ச்சாவதாரங்களை எல்லாம் ஸ்ரீ அழகியசிங்கர் முடியானிர்ப்படியே மனோரதித்திருக்கிற தமது கண்களாரக் கண்டுகளித்து தாள்கள் தலையால் வணங்கி வாயார வாழ்த்தி கைகளாலாரத் தொழுது வலம்செய்து கற்றிருக்கவேணுமென்கிற ஆஸ்தையினால் தமதாராத்ய தேவதையான சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானோடும் அவனுடைய பரிஜன பரிச்சதங்களோடும் மற்றும் தூராத மனக்காதல் தொண்டர் தங்கள் குழாங்களோடும் புறப்பட்டு முதலில் கங்கையிற் புனிதமாய் காவிரிநதியின் தீரத்தில் எழுந்தருளி யிருக்கும், பெரும்புலியூர், கூடலூர், கபிஸ்தலம், தஞ்சை முதலிய திவ்ய தேசத் தெம்பெருமான்களுடைய திருவடிகளைத் தொழு தெழுவதில் திருவுள்ளமாய் காவிரிக் கரையோ டெழுந்தருளி திருமழிசைப்பிரா னுகந்த பெரும்புலியூர் திவ்ய தேசத்தின் திருக்கோபுர வாசலைக் கிட்டினவாறே அந்த ஸன்னிதியின் அதிகாரிகளும் அர்ச்சகர்களும் பரிஜன பரிச்சதங்களோடு ஸ்ரீ சடகோபனை திருப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்க ரெழுந்தருளி இருந்த விடத் ததெதிர்கொண்டு வர ஸ்ரீ அழகியசிங்கரும் அத்யந்த பக்தி ப்ரேரிதராய் ஸ்ரீ சடகோபனை ஸாஷ்டாங்கமாக அனேகம் தடவை தண்டன் ஸமர்ப்பித்து வணங்கின திருமுடிமேல் கூப்பிய கைகளோடிருக்க அவ்வர்ச்சகர் ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளிப் பாடிட்டு அவ்வெம்பெருமான் சூடிக் களைந்த துழாய் மாலையினால் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருமார்பையும் அவ்வெம்பெருமா னுடுத்துக்களைந்த பீதகவாடையினால் திருமுடியையு மலங்கரித்து அதின்மேல் ஸ்ரீ சடகோபனை ப்ரஸாதிக்க ஸ்ரீபரதாழ்வான்

'யாவந்ந சரணௌ ப்ராது: பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ ।
ஶிரஸா தாரயிஷ்யாமி ந மே ஶாந்திர்பவிஷ்யதி ॥'

என்று ஸ்ரீராமபிரானுடைய மகாராஜ லக்ஷணங்களோடு கூடிய திருவடிகளை எப்பொழுது என் தலையினால் தரிக்கப் போகிறேனோ, அப்பொழுதுதான் எனது துயரங்

கள் தீர்ந்துபோகும் என்று சொல்லி நெடுங்காலமாக அதையே மனோரதித்திருந்து 'ததஶ்ஶிரஸி க்ருத்வா தே பாதுகே ஹர்ஷதோஷிதா | ஶத்ருக்னோ ஹர்ஷம் ஹ்ருஷ்ட:' என்கிறபடியே முன்பு மனோரதித்திருந்தபடியே ஸ்ரீ ராகவனுடைய திருவடிகளோடு துல்யங்களான பாதுகைகளை தனது சிரஸினல் தரித்து முடிசூடின மன்னரைப் போல பாதுகைகளை தரித்ததினல் அதிக ஸந்தோஷத்தை அனுபவித்திருந்ததுபோல, ஸ்ரீ அழகியசிங்கரும் அவ் வெம்பெருமான் தமக்கு அர்ச்சகமுகமாக அருளப் பாடிட்டு ஸ்ரீ சடகோபனைத் தமது சிரஸுக்கு பூஷணமாக ஸமர்ப்பித்த மாத்திரத்தினலே அளவில்லாத வானந்தத்தை உடையவராய் கோபுரத்திற்குள்ளே சென்று த்வஜஸ்தம்பத்தினருகே தண்டனிட்டு திருக்கோயிலே வலம் வந்து ஸ்ரீ விஷ்வக்ஸேநரை நமஸ்கரித்து அந்த மண்டபத்தினருகில் த்வாரபாலகர்களை ஸேவித்து உள்ளே சென்று ஸர்வேச்வரனையும் ஸாஷ்டாங்கமாக வனேகம் தடவை தண்டன் ஸமர்ப்பித்து 'அவ்வெம்பெருமானை திருவடி முதல் திருமுடி வரையிலும் கண்களாலாறக் கண்டனுபவித்து ஜிதந்தே முதலான மந்த்ரங்களினலும் மற்றும் பல ஸ்தோத்திரங்களினலும் வாயார வாழ்த்தி 'ஸ்நேஹோபேதம் ஸம்பூர்ணம் ஸாஷ்டாங்கீக்ருத மாத்ருவாந்' என்றும் மொய்த்துக் கண் பனிசோர மெய்கண் சிலிர்ப்ப என்றும் சொல்லுகிறபடியே பக்தி பராதீனங்களான தேகேந்திரியங்களோடு அவ்வெம் பெருமானுடைய வலது புறத்திலிருந்து அவன் திருமேனி ஸௌந்தர்யத்தி லாழ்ந்த திருவுள்ளத்தோடு அத்திருமேனிக் கனுகுணமாய் உயர்ந்ததான பீதாம்பரத்தையும் புஷ்பலாதிகளான வுபசாரங்களையும் ஸமர்ப்பித்து நிற்க, அவ் வர்ச்சகரும் அந்த பீதாம்பரத்தை திருமேனியில் ஸமர்ப்பித்து உபஹாரங்களையும் அமுது செய்வித்து நீராஜனம் செய்து ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளப் பாடிட்டு தீர்த்தம், திருமாலை, பரியட்டம், ஸ்ரீ சடகோபனையும் திருத்துழாய் உபஹாரங்களையும் ப்ரசாதிக்க ஸ்ரீ அழகிய சிங்கரும் அவ்வெம்பெருமான் அனுக்கிரகித்த வரிசைகளை எல்லாம் குறைவறுப் பெற்று அத்யந்த ஸந்துஷ்டனய் அபராத க்ஷாபணத்தைச் செய்து அப்படியே நாச்சியார் ஸன்னிதியிலும் ஆழ்வார் ஸன்னிதியிலும் ஸர்வ வரிசைகளையும் பெற்று ஸம்பூர்ணமான திருவுள்ளத்தோடு ஸன்னிதியில் ஓரிடத்தில் சற்று நேரமெழுந்தருளி இருந்து திருவஷ்டாக்ஷர ஜபத்தைச் செய்தருளி ஸ்ரீ விஷ்வக்ஸேநரை ஸேவித்து நியமனம் பெற்றுக்கொண்டு 'ஹ்ருதி ஸம்ஸ்த்திதவர்ணம் விவித: கேஶவ ஶேஷ ஸ்திதா' என்கிறபடியே எம்பெருமான் திருமேனியைத் தமது திருவுள்ளத்தில் ஸ்திர ப்ரதிஷ்டிதமாகத் த்யானித்துக்கொண்டு ஸம்பூர்ண மனோரதராய் ஆச்ரமத்திற் கெழுந்தருளினர்.

அப்படியே தஞ்சைமாநகரில் எழுந்தருளி திருமங்கையாழ்வாரல், "என்செய்கேனடியே னுரையீர் இதர்க்கென்றும் என்மனத்தே இருக்கும் புகழ் தஞ்சையாளியை பொன்பெயரோன் நெஞ்சமன்றிடந்தவனை தழலேபுரைமின் செய்வாளறக்கன் நகர்பாழ்பட சூழ்கடல் சறைவைத்து இமையோர் தொழும் பொன்செய்மால் வறையை மணிக்குன்றினை யன்றி என்மனம் போற்றி என்னுதே" என்று மங்களாசாஸநம் பண்ணப்பட்ட, நரசிங்கன், நீலமேகன், மணிக்குன்றன் என்கிற மூன்று எம்பெருமான்களுடைய ஸன்னிதிகளிலும் முன்பு தஞ்சை நகரத்து இராஜவம்சத்தார்கள் பக்தியினதிசயத்தினல், பரிஜனங்களோடும் பரிச்சதங்களோடும் எதிர்கொண்டு உபசரித்து டிப்டி கலெக்டர், ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலிய உத்யோகஸ்தர்களைக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கருக்கு மங்களாசாஸநத்தை யதாக்ரமமாக பண்ணிவைக்க, ஸேவித்து ஸந்துஷ்டரானர். அப்படியே, திருமங்கையாழ்வாரால், "காவிரிப்பெருநீர் வண்ணன் கண்ணன் மேவிழிகளும் கூடலூரே என்றும் இலேதாழ்தெங்கின் மேல்நின்று இளநீர் குலே தாழ்கிடங்கின் கூடலூரே என்றும் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட கூடலூர் எனற காவிரி கரையிலெழுந்தருளி இருக்கும், வைய்யம்காத்த பெருமானையும் பத்மாஸநீ தாயாரையும் மங்களாசாஸநம் செய்து, 'மோவாயெடிதிஶம் ஜமதி......ஸவ்யாஸாஸஹாஷ்வ நஷ்டிழ' என்கிறபடியே ஸாதுக்களுடைய ஸம்ரக்ஷணத்தை ப்ரார்த்தித்தருளி பெரும்புலியூரில் போல அவ்வெம்பெருமானுடைய அநுக்ரகத்தினல் அர்ச்சகமுகமாக அருளப்பாடு முதலான ஸர்வவரிசைகளையும் பெற்று அளவிலாவானந்தத்தோடு திரும்பி எழுந்தருளினர்.

அப்படியே, கூற்றமும் சாரா, கொடுவினையும் சாரா, தீ மாற்றமும் சாரா வகையறிந்தோன் அற்றின் கறைகிடக்கும் கண்ணன், கடல் கிடக்கும் மாயன் உறை

கிடக்குமுள்ளத்தெனக்கு என்று திருமழிசைப்பிரானால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட கபிஸ்தலத்தில் எழுந்தருளி இருக்கும் கஜேந்த்ரவரதனையும், பொற்றாமரையாள் தாயாரையும் மங்களாசாஸநம் பண்ணி பிறகு, பள்ளச்செருவில் கயலுகள பழனக் கழனியதனுள்போய் புள்ளுப்பிள்ளைக் கிரைதேடும் புள்ளம் பூதம் குடியானே என்றும் மறையால் முக்தீயவை வளர்க்கும் மன்னுபுகழால் வண்மையால் பொறையால் மிக்க வந்தணர்வாழ் புள்ளம்பூதம் குடிதானே என்றும் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட சக்ரவர்த்தி திருமகனை மங்களாசாஸநம் பண்ணத் திருவுள்ளமாய் அங்கெழுந்தருளி வில்லி ராமனையும் ஸ்ரீ ஜாநகியையும் கற்பார் ராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ என்கிற பாசுரத்தின் அர்த்தாநுநுஸந்தாநத்தோ டனுபவித்து க்ருதார்த்தரானார்.

அப்படியே, அன்னவனை யாதனூர் ஆண்டவனுக்கு மையனை என்று திருமங்கை யாழ்வாரால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட எம்பெருமானையும் மற்றும் பல திவ்ய தேசங்களையும் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு, “சீரார் செந்நெல் கவரி வீசச் செழுநீர் திருக்குடந்தையில் ஏரார் கோலம் திகழக்கிடக்கும் ஆராவமுதாழ்வானுடைய திருவடி தொழுவதில் திருவுள்ளமாய் திருக்குடந்தைக்கு எழுந்தருளினார்,

---

(2)

ஸ்ரீ அழகியசிங்கர் தேரழுந்தூ ரெம்பெருமான் மங்களாசாஸநம்

ஸ்ரீ அழகியசிங்கர் திருவிண்ணகர் எம்பெருமானை மங்களாசாஸநம் பண்ணின பிறகு அதற்கு ஸமீப தேசத்திலிருப்பதாய் உபரிசரவசுவென்கிற அரசனுடைய ஆகாய மார்க்கமாய்ச் சென்ற தேரை அழுந்திக் கிடக்கும்படி செய்ததாலே தேரழுந்தூர் என்று திருநாமம் பெற்றதாய், செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் என்கிறபடியே, சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள் நான்கும் நர்த்தனம் பண்ணுமிடமான நாவுடையவர்களாய், திசைமுகனை யனையவர்கள் செம்மை மிக்க என்கிறபடியே தர்மாநுஷ்டான விஷயத்திலும், சதுர்முகனோடு துல்ய சீலர்களான அந்தணோத்தமர்கள் நித்ய வாஸம் பண்ணுகையால், அணியழுந்தூர், என்று மண்ணுலகிற்க் கலங்கார மகா ரத்னமென்று வர்ணிக்கப்பட்ட வழுந்தூர் எம்பெருமான் திருவடி தொழுவதில் ஆஸ்தையினால் தமது திருவாராதனமான சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானுடனும் அனந்தங்களான அவனுடைய பரிஜனபரிச்சதங்களுடனும் புறப்பட்டு, ஆமருவி எம்பெருமான் ஸன்னிதிக்கு ஸமீப தேசத்தில் எழுந்தருள அந்த ஸமாசாரத்தைச் செவியுற்று, அழுந்தூர் திவ்ய தேசத்ததிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் அதிகமான பக்தியுடையவர்களாய் அவருடைய மங்களாசாஸநத்தில் ச்ரத்தை யுடையவர்களாய் ஏற்கெனவே அங்கு எழுந்தருளின அழகியசிங்கர்கள் விஷயத்தில் நடந்திருக்கும் அநுஷ்டானங்களை அநுஸரித்து சத்ரம் சாமரங்களோடும் பரிஜன பரிச்சதங்களோடும் வாத்ய கோஷங்களோடும் கடகடப்பை குளத்தின் கரைக்குப் போய் ஸ்ரீ அழகிய சிங்கரை எதிர்கொண்டழைத்து ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளப்பாடிட்டு அரவணம் திருமாலை முதலிய வரிசைகளை ஸமர்ப்பித்து ஸர்வ பரிஜனபரிச்சதங்களோடு ஸன்னிதி வீதிவரையில் எழுந்தருளின பிறகு கீழையூர் மேலையூர் எல்லை நிலமான உரியடிச்சந்தில் ஸ்ரீ சடாரியை திருப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிவந்து ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அருளப்பாடிட்டு திருமாலை சுருதித் திருப்பரியட்டங்களோடு ஸ்ரீ சடாரியை ஸமர்ப்பித்து, அபயஹஸ்தம் திருத்துழாய்களையும் ஸமர்ப்பிக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் அவ் வெம்பெருமான் அர்ச்சகமுகமாகத் தமக்கு அநுக்கிரகித்த வரிசைகள் எல்லாவற்றையும் பெற்று அதிகமான ஸந்தோஷத்தையுடையவராய் ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மன் கண்ணன் திருப்பல்லக்குக்களுடன் கோயிலுக்குள்ளே சென்று ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்மனையும் கண்ணபிரானையும் ஸன்னிதிக்குள் ஓரிடத்தில் எழுந்தருளப்பண்ணிவிட்டு திருக்கோயி லாழ்வாரை வலம் செய்து உள்ளே சென்று த்வஜ ஸ்தம்பத்தினருகே ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்து, பிறகு த்வாரபாலர்களையும் ஸேவித்து, சந்தனம் புஷ்பம் தாம்பூலகம் பழவர்க்கங்களுடனும் திவ்ய பீதாம்பரத்துடனுமுள்ளே சென்று அவ்வாமருவியப்பனையும் அனேகம் தடவைகள் தண்டன் ஸமர்ப்பித்து நெடுங்காலம் காணவேணு மென்றாசைப்பட்டிருந்த திவ்ய திருமேனியினுடைய ஸர்வஜன த்ருஷ்டிசித்தாபஹாரியான ஸௌந்தர்யாம்ருத ஸாகரத்திதில் நிமக்னமான மனஸ்ஸையுடையவராய், ‘ஜுஹாஷஸீ தநேத்ராம்வு:’ என்றும், மொய்த்துக் கண்பனிசோர என்றும் சொல்லுகிறபடியே பக்திபரவசங்களானதே

கேந்திரியங்களோடு ஆமருவியப்பனுடைய திருவடிமுதல் திருமுடிவரையிலுள்ள திவ்யாவயவங்களை, பகவத்யான ஸோபாநத்தின்படியே அனுபவித்து, "திருவுக்கும் திருவாகிய செல்வா தெய்வத்துக்கரசே செய்யகண்ணா, உருவச் செஞ்சுடராழி வல்லானே உலகுண்டவொருவா திருமார்பா, ஒருவர்க் காற்றியுய்யும் வகை ஒன்றுல், உடன்னின்று ஐவர் என்னுள்ப் புகுந்து ஒழியாது அருவித்தின்றி உசுஞ்சி நின்னடைந் தேன் அழுந்தூர் மேல்திசை நின்றவம்மானே" திருமொழியின்படியே வாயார வாழ்த்தி தலைமேல்கூப்பிய கைகளோடு நெடுங்காலமிருந்து பீதாம்பரத்தையும் புஷ்பமாலாதிகளையும் ஸமர்ப்பித்து, க்ருதார்த்தராய் நிற்க.

அவ்வர்ச்சகரும் ஸ்ரீ அழகியசிங்கருக் கருளப்பாடிட்டு திருமாலை பரியட்டங்களோடு ஸ்ரீ சடகோபனை ஸமர்ப்பித்து மற்றும் தீர்த்த துளஸீ ப்ரஸாதாதிகளையும் ஸமர்ப்பித்து, அவ் வெம்பெருமானுடைய வரிசைகளை எல்லாம் பெற்று ஸம்பூர்ணமான மனோரதராய் ஆமருவிப் பெருமான் திருவடிகளையே த்யானித்துக் கொண்டு எழுந்தருளி, தாயார் ஸன்னிதியிலும் பெருமாள் ஸன்னிதியில் போல ஸகல வரிசைகளையும் பெற்று ஸேவித்து க்ருதார்த்தராய் தமது திருப்புகழ்கள் பலவும் பாடுகிற தொண்டர்களின் குழாங்களோடுத் தமது மடத்திற்கு எழுந்தருளினர்.

---

(3)

ஸ்ரீ அழகியசிங்கர் திருக்குடந்தை மங்களாசாஸநம்

ஸ்ரீ அழகியசிங்கர், புள்ளபூதன் குடியில் வில்வல்லி ராமனை மங்களாசாஸநம் பண்ணின பிறகு, அந்த திவ்ய தேசத்தின் ஸமீபத்திலிருக்குமதாய் "சீரார் செந்நெல் கவறி வீசும் செழுநீர் திருக்குடந்தை" என்றும், தூவிசேர் அன்னம் துணையொடுபுணரும் சூழ்புனல் குடந்தையே தொழுதென்றும், "தூவிசேரன்னம் மன்னும் சூழ்புனல் குடந்தை யானை" என்றும், குயிலாலும் வளர்பொழில் சூழ்தண் குடந்தை என்றும் "தோடவிழ் நிலமணம் கொடுக்கும் சூழ்புனல் குடந்தை" என்றும், "கொங்கேறும் சோலை குடந்தைக் கிடந்தானை" என்றும், "தாராளன் தண்குடந்தை நகராளன்" என்றும், கொண்டாடப்படுகிறபடியே கங்கையிற் புனிதமாய காவிரிநீர் நிரந்தரமாய்ப் பரந்து பாய்கையாலே நீர்வளம் நிலவளம் மிகுதித்திருப்பதாய், சேரும் திருக்குடந்தை என்கிறபடியே, "சொல்லார் சுருதிமுறையோதி சோமுச் செய்யும் தொழிலினர்களான நல்ல நான்மறையோர் நிறைந்து வாழ்ந்திருக்கும் திவ்ய தேசமாகையாலே நகரச் சிறப்பையுடையதான திருக்குடந்தையில் கண்வளர்ந்தருளுகிறவனாய், திருமாலுக்குத் தித்திக்குமே என்கிறபடியே, அளப்பறிய வாராவமுதத்திற்கும் தேனும் பாலும் கன்னலுமமுதுமாக நித்யானுபாவ்யமா யிருந்து, இவ்வுலகத்தில் சில காலத்தில் மறைந்து போயிருந்து தமிழ் மறைகள், மறுபடியும் இவ்வுலகத்தில் விளங்குவதற்கு ஆதிகாரணமாக இருக்கையாலே, ஆராவமுதாழ்வா னென்று விலக்ஷணமான திருநாமத்தோடு விளங்கும் எம்பெருமானை, அநுபவிப்பதிலாசையினலே, சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானேடும் அவனுடைய விபூதிகளோடும் குடந்தையை நோக்கி எழுந்தருள,

இந்த விஷயத்தையறிந்த திருக்குடந்தை திவ்யதேசத்ததிகாரிகள் ஏற்கெனவே குடந்தைக்கு எழுந்தருளின ஸ்ரீ அழகியசிங்கர்கள் விஷயத்தில் நடத்தப்பட்டிருக்கும் அனுஷ்டானங்களை அனுஸரித்து; ஸன்னிதியின், பரிஜனபரிச்சதங்களோடும், வாத்ய கோஷங்களோடும் அரவணம் திருமாலைகளோடும்; புளியஞ்சேரி கிராமத்திலிருக்கும் வெண்ணைத்தாழி மண்டபத்தினருகே ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்கொண்டழைத்து, ஸ்ரீ அழகியசிங்கருக்கு அருளப்பாடிட்டு அரவணம் திருமாலைகளை ஸமர்பித்து, குடந்தைக் கடைவிதியில் எழுந்தருளினவாரே, ஸ்ரீ கோபாலன் ஸன்னிதிக்கி ஸமீபத்தில் திருப்பல்லக்கில் எழுந்தருளின ஸ்ரீ சடாரியையும், அருளப்பாடு திருமாலை திருபரியட்டங்களோடு ஸமர்ப்பித்து, பெரிய திருவீதிவழியே ஆராவமுதன் ஸனனிதிக்கி எழுந்தருளப்பண்ண, ஸ்ரீ அழகியசிங்கரும், த்வஜ ஸ்தம்பத்தினருகில் ஸ்ரீ நிகமாந்த தேசிகனையும் நம்மாழ்வாரையும் தண்டன் ஸமர்ப்பித்து, த்வஜ ஸ்தம்பத்தினடியில் பகவத் பரிஜனங்களை ஸேவித்து, ஸன்னிதிக்குள்ளே எழுந்தருளி, த்வாரபாலகர்களை நமஸ்கரித்து, பிறகு ஸ்ரீ கோமளவல்லித் தாயார் ஸன்னிதிக்கு எழுந்தருளினர்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா |
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ||

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ மதுராந்தகம் சாஸ்த்ரப் பாடசாலை

ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலை விஷயமாக அநேக காரணங்களைப் புரஸ்கரித்து, சிரோமணி பாகத்தில் வ்யாகரணமும் ந்யாயமுமே ப்ரவசநம் செய்யப்பட வேண்டுமென்றும், அவை இரண்டுமே இப்பொழுது பர்யாப்தங்களாக இருக்குமென்றும் நிர்ணயித்து, அந்த நிர்ணயத்தை வித்யார்த்திகளுக்கு விதிதமாகும்படி செய்யவேண்டுமென்று ஸ்ரீ அழகியசிங்கர் நியமநமாகி இருக்கிறது. அந்த நியமந ப்ரகாரம் அந்த நிர்ணயத்தை இந்தப் பத்ரிகை த்வாரா நாம் வித்யார்த்திக ளெல்லாருக்கும் விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்; ஸ்வதேசமித்ரன் என்னும் பத்ரிகையிலும் அந்த நிர்ணயம் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. ந்யாய சாஸ்த்ர விஷயமாக வித்யார்த்திகளிடமிருந்து ப்ரார்த்தநா பத்ரங்கள் ஏற்கெனவே கிடைத்திருக்கின்றன. வ்யாகரண சாஸ்த்ரத்தை அபேக்ஷிக்கும் வித்யார்த்திகள் தமது ப்ரார்த்தநா பத்ரத்தை நிகழும் வைகாசி மாஸக் கடைசிக்குள் அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

வருகிற ஆனிமீ 8உ யில் பாடசாலையை உபக்ரமிக்கலாம் என்பது ஸ்ரீ அழகியசிங்கருடைய திருவுள்ளம். இது பர்யந்தம் சிரோமணி பாகத்திற்குப் பதினேரு வித்யார்த்திகளும், ப்ரவேஶக பாகத்திற்கும் அதற்குக் கீழ்பாகத்திற்குமாக இருபது வித்யார்த்திகளும் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். வ்யாகரண சாஸ்த்ரத்தை அபேக்ஷிக்கும் வித்யார்த்திகளிடமிருந்து ப்ரார்த்தநா பத்ரங்கள் கிடைத்த பிறகு, இன்னும் நாலு ஐந்து பெயர்கள் சேர்க்கப்படலாம். மொத்தம் நாற்பது பெயர்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டு மென்பதே நோக்கம்.

பாடசாலைக்கு அத்யக்ஷ அத்யாபயிதாவாக வித்வாந் திருக்கோட்டியூர் ஸ்ரீ. உப. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி வரிக்கப்பட்டிருக்கிறார். அவருடன் மூன்று வ்யாகரண சிரோமணிகளும் மூன்று ந்யாய சிரோமணிகளும் ப்ரவசநம் செய்வதில் ஸஹாயம் செய்பவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதர கைங்கர்யபரர்களும் யதோசிதம் சீக்கிரத்திலேயே நியமிக்கப்படுவார்கள். கட்டடம் மாத்ரம் கொஞ்சம் விளம்பிக்குமென்று தோன்றுகிறது. உபக்ரம காலத்திலும் அதற்குப் பிறகு கட்டடம் ஸமக்ரமாகும் பர்யந்தமும் அங்குள்ள தேவாலயத்திற்குள்ளிருக்கும் வஸந்த மண்டபத்தில் பாடசாலையை நடத்திவரலாமென்று ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம்பற்றி இருக்கிறார். தேவாலயாதிகாரிகள் அந்த மண்டபத்தை உபயோகித்துக் கொள்ளும்படி அநுமதி கொடுப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

இந்தப் பாடசாலையின் ப்ரதாந நோக்கம் வைதிக ஸ்ரீயை வ்ருத்தி செய்ய வேண்டுமென்பதே. ஆகையால், இந்தப் பாடசாலை கைங்கர்யத்தில் அந்வயிக்குமெல்லாரும் ஸ்வயம் ச்ரத்தாளுக்களாகவும் அநுஷ்டாந நையத்யம் உடையவர்களாகவும் இருப்பதுடன் வித்யார்த்திகளையும் அம்மாதிரி இருக்கும்படி சிக்ஷித்து வரவேண்டுமென்பது அந்த அபிவ்ருத்தியை மநோரதிருப்பவர்களுடைய ஹார்த்தமான ப்ரார்த்தநை. ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் எழுந்து ஸ்நாநாதிகளைச் சரிவரச் செய்து உதயோபஸ்தாநத்தையும் ப்ரஹ்ம யஜ்ஞம் முதலியவைகளையும் தவறாமல் நடத்தி வரும்படி வித்யார்த்திகளெல்லாரையும் பாதுகாத்து வரவேண்டியது அவர்களுடன் எப்பொழுதும் பழகிக் கொண்டுவரும் ப்ரவசநாதிகாரிகளின் பரம். அவர்கள் அந்தப் பரத்தைத் தமது ச்ரமத்தைக் கொஞ்சமேனும் பாராட்டாமல் நிர்வஹித்து வரவேணும். பாஹ்யாநுஷ்டாநத்திற் போல ஆந்தர வ்யாபாரங்களிலும் சுத்தி அவச்யமானதால், அதைப் பயிற்சி செய்வதிலும் ப்ரயத்நத்தில் ஒருவித லோபமும் வராமலிருத்தல் வேண்டும். ஸத்ய வசநம் தர்மாநுஷ்டாநம் ஆர்ஜ்ஜவம் பூததயை காமக்ரோத மற்றிருப்பது இவை முதலிய ஆத்மகுண பூர்த்தியுடனும் ஆசார சுத்தியுடனும் நமது சிறுவர்கள் வர்த்தித்து வரும்படி பழக்கப்பட்டு வந்தால், அதைக் காட்டிலும் ஜகத்திற்கு ச்ரேயஸ்கரமான உபாயம் வேறு ஒன்றுமில்லையென்று சொல்லலாமன்றோ?

* * * *

நிகழும் வைகாசி மாஸம் 32-உ ஞாயிற்றுக்கிறமை இரவு நாழிகை 42, விநாடி 36-ல் மிதுந ஸங்க்ரமணம் ஸம்பவிக்கின்றது.

ஷடசீதி ஸங்க்ரமணம்

இது ஷடசீதி. இந்த ஸங்க்ரமண ப்ரயுக்தமாகச் செய்யவேண்டிய பித்ரு தர்ப்பண விஷயத்தில் வைதிகர்களுள் விப்ரதிபத்தி உண்டு. சிலர், ஷடசீதி விஷயத்தில், ஸூர்யாஸ்தமயத்திற்குப் பிறகு ஸங்க்ரமணம் நேரும் பக்ஷத்தில், பர திநத்திலேயே தர்ப்பணத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதன் ப்ரகாரம், இந்த ஸங்க்ரமண ச்ராத்தத்தை மறுதிநம், அதாவது ஆனி 1-உ திங்கள் கிழமை காலையில் செய்யவேண்டும். மற்றும் சிலர், இரவின் காலத்தை நாலு முஹூர்த்தங்களாகப் பிரித்து, அவைகளுள் இரண்டாவது முஹூர்த்தத்தின் கடைசி நாழிகையிலாவது அதற்குப் பிறகாவது ஸங்க்ரமணம் ஸம்பவித்தால் மாத்ரம் பர திநத்தில் ச்ராத்தம் செயயவேண்டும்; அந்தக் கடைசி நாழிகைக்குப் பூர்வமே ஸங்க்ரமணம் நேர்ந்தால் பூர்வதிநமே ச்ராத்த காலமாகும் என்று சொல்லுகிறார்கள். ப்ரக்ருதத்தில், இரண்டாவது முஹூர்த்தத்தின் கடைசி நாழிகைக்குப் பூர்வமே மாஸம் பிறக்கிறபடியால் இவர்களுடைய ஸித்தாந்தப்படி இந்த ஸங்க்ரமண ச்ராத்தத்தை வைகாசிமீ 32-உ ஞாயிற்றுக்கிழமையிலேயே செயய வேண்டும்.

“ராத்ரி த்³விதீயயாமாந்த்ய க⁴டீத்³வயமதே⁴ ।
அர்த⁴ராத்ரம் விஜாநீயாத்”

என்னும் ஸச்சரித்ர ஸுதாநிதி வாக்யம் இதற்கு ப்ரமாணம். ராத்ரியின் இரண்டாவது யாமத்தின் கடைசி நாழிகை அதற்கு அடுத்த நாழிகை இந்த இரண்டு நாழிகை காலத்திற்கு அர்த்த ராத்ரமென்று பெயர். ‘உப⁴யோரர்த⁴ராத்ரஸ்ய’ இத்யாதியான வாக்யம், அர்த்தராத்ரத்திற்கு முன்னும் பின்னும் ஸங்க்ரமணம் நேர்ந்தால், அப்பொழுது ச்ராத்த காலம் எப்படி என்பதைச் சொல்லுகிறது. இந்த வாக்யமோ, அர்த்தராத்ரத்தில் நேரும் ஸங்க்ரமண விஷயம். இந்த இரண்டு அநுஷ்டாநங்களுள் எது ப்ராமாணிகமாகும் என்பதைத் தர்ம சாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயிக்க ப்ராப்தம்.

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—5—'42 to 31—5—'42

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

		Rs.
1.	Sri Velur Krishnamachariar, Malayankulam ...	3
2.	,, T. Ramaswamy Iyengar, Kumbakonam ...	3
3.	,, S. Desikam Iyengar, Periyakulam	3
4.	,, S. Srinivasagopala Iyengar, North Sarukkai ...	3
5.	,, V. Krishna Iyengar, Salem ...	3
6.	,, K. R. Gopala Iyengar, Madura ...	1
7.	,, T. E. Satagopachariar, Tiruppapuliyur ...	3
8.	,, K. V. Venkatachariar, Namakkal.	3
9.	,, N. Krishnaswamy Iyengar, Karur.	3
10.	,, Sir V. T. Krishnamachariar, Baroda ...	3
11.	,, T. Rajagopalachariar, Cuddalore...	10
12.	,, V. Thirumalachariar, Viravanallur	3
13.	,, R. Venkatesa Iyengar, Chidambaram ...	3
14.	,, M. S. Varada Iyengar, Paramakudi	3
15.	Sri K. Sundaram Iyengar, Tirumayam ...	1/8
16.	,, K. Kuppuswami Iyengar, Aduthurai ...	3
17.	,, A. Chinnathirumala Iyengar. S. Travancore ...	3
18.	,, T. N. Vanamamalai Iyengar, Rajapalayam ...	3
19.	" A. Madhava Iyengar, Basavangudi	3
20.	., A. R. Narasimha Iyengar, Tanjore	3
21.	,, R. Srinivasa Iyengar, Poundarikapuram ...	3
22.	., T. K. Srinivasa Iyengar, Tilliambur ...	3
23.	,, P. S. Desikachariar, Mannargudi...	3
24.	,, T. Kothandarama Iyengar, Tanjore ...	3
25.	,, P. S. Lakshminarasimhachariar, Devanarvilagam ...	3
26.	,, Durai Raghavachariar, Tiruvahindrapuram ...	3

[இந்த ஸஞ்சிகையுடன் ஆறு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. பத்ரிகையைப் பெற்றுக் கொள்பவரெல்லாரும் க்ருபைசெய்து வர்ஷச் சந்தாவை விளம்பமிராமல் அனுப்பினல் ஸௌகர்யமாக இருக்கும்.]

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்திரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதிப் பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினல், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழுத ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்படும்.

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

இது ஸ்ரீ அஹோபில மடத்தால் ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும் பத்ரிகை. இதன் நோக்கங்களாவன :—

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்யத்தை வ்ருத்தி செய்வது.

2. ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷ தத்வங்களைப் பற்றி தத்வ வித்துக்களின் ஸஹாயத்தைக்கொண்டு வ்யாஸங்களை வெளிப்படுத்துவது.

3. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடைபெறும் நித்யோத்ஸவாதிகளைப்பற்றியும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களாக அப்பொழுதுக் கப்பொழுது நடைபெறும் வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்களை ஸங்க்ரஹிப்பது.

4. வைதிகாசாரம் வேதோக்த மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்கு வேறு உபாயங்களைத் தேடுவது.

5. இவைபோன்ற மற்றை கார்யங்களைச் செய்வது.

விளம்பரம்:— இந்தப் பத்ரிகையில் விளம்பரங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள வீதம் சார்ஜு வஸூல் செய்யப்படும்.

(1)	முழுப்பக்கம் ஒருதடவைக்கு		ரூ.	4—0—0
(2)	ஷை	3 மாஸங்களுக்கு	,,	10—0—0
(3)	ஷை	6 ,,	,,	18—0—0
(4)	ஷை	12 ,,	,,	34—0—0

பாதிப் பக்கத்திற்குப் பாதி சார்ஜும், கால் பக்கத்திற்கும் அதற்குக் குறைந்த பாகத்திற்கும் கால் சார்ஜும் செய்யப்படும். சார்ஜு முழுவதையும் முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

இந்தப் பத்ரிகைக்குச் சந்தாதாரர்கள் ஆயிரம் பெயர்கள் இருக்கிறார்கள்.

: ஆபீஸ் விலாஸம் :

5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், மதராஸ்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.